# கீதாசார்யன்

திருவள்ளூர் வீரராகவன்



# கீதாசார்யன் 10

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



"कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन।"

தொகுதி 1 | ஸித்தார்த்தி௵ | ஆடி மீ | ஜுலை 79 | பகுதி 10




ஆசிரியர்

**M. A. வேங்கடகிருஷ்ணன், M. A.**

P. T. சுந்தர வரதன்
நிதிக் காப்பாளர்

N. கணபதி
விளம்பரப் பொறுப்பாளர்

7, தெற்கு மாட வீதி,
திருவல்லிக்கேணி : சென்னை-600005.

ஆண்டுச் சந்தா ரூ. 10

விலை ரூ. 1-00

**பாஞ்சஜந்யம் ஹ்ருஷீகேசோ தேவதத்தம் தநஞ்ஜய:**
**பௌண்ட்ரம் தத்மௌ மஹாசங்கம் பீமகர்மா வ்ருகோதர: 15**

புலன்களுக்குத் தலைவனான கண்ணன் பாஞ்சஜன்யம் எனும் சங்கையும், அர்ஜுனன் தேவதத்தம் எனும் சங்கையும், பயங்கரமான செயல்களையுடைய பீமஸேனன் பௌண்ட்ரம் எனும் பெரும் சங்கையும் ஊதினார்கள்.

**அநந்தவிஜயம் ராஜா குந்தீபுத்ரோ யுதிஷ்டிர:**
**நகுல: ஸஹதேவச்ச ஸுகோஷ மணிபுஷ்பகௌ 16**

குந்தியின் பிள்ளையான ராஜா தர்ம புத்ரர் அநந்தவிஜயம் எனும் சங்கையும், நகுலனும் சகதேவனும் முறையே ஸுகோஷம் மணி புஷ்பகம் எனும் சங்குகளையும் ஊதினர்.

**காச்யச்ச பரமேஷ்வாஸ: சிகண்டீச மஹாரத:**
**த்ருஷ்டத்யும்நோ விராடச்ச ஸாத்யகிச்சாபராஜித: 17**

சிறந்த வில்லாளியான காசியரசனும், மஹாரதனான சிகண்டியும், திருஷ்டத்யும்னனும், விராடவரசனும், போரில் தோல்வியுறாத சாத்யகியும் (தத்தம் சங்குகளை ஊதினர்).

**த்ருபதோ த்ரௌபதேயாச்ச ஸர்வச: ப்ருதிவீபதே**
**ஸௌபத்ரச்ச மஹாபாஹு: சங்காந் தத்மு: ப்ருதக்ப்ருதக் 18**

துருபதனும், திரௌபதியின் பிள்ளைகளும், நீண்ட கையை உடைய அபிமன்யுவும் எல்லாத் திசைகளிலும் தத்தம் சங்குகளை தனித்தனியாக ஊதினர்.

**ஸகோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத்**
**நபச்ச ப்ருதிவீஞ்சைவ துமுலோ வ்யநுநாதயந் 19**

ஆகாயத்தையும், பூமியையும் எதிரொலிக்கச் செய்த அச்சங்கவொலிகள் திருதராஷ்டிரனின் பிள்ளைகளான கௌரவர்களின் இதயங்களைப் பிளந்தது.

# திருவுள்ளூர்

T. A. பாஷ்யம்

**பார்த்தன் !** கண்ணா உன்னுடைய பேருபகாரத்தால், இன்று திருநின்றவூரை ஸேவிக்கும் பாக்கியம் ஏற்பட்டது. புறப்பட்ட மூன்று மணி காலத்திற்குள் திருநின்றவூர் வந்து பத்தராவிப் பெருமானையும், என்னைப் பெற்ற தாயாரையும் ஸேவித்தாகி விட்டது. இன்றைக்கு இன்னும் நிறைய அவகாசம் இருக்கிறதே. எனவே நாம் இன்றைக்கே இன்னொரு திவ்ய தேசத்தையும் ஸேவிக்கலாமே! இங்கிருந்து மிக அருகிலுள்ள திவ்யதேசம் எது கண்ணா!

**கண்ணன் :** இங்கிருந்து மிக அருகிலுள்ள திவ்யதேசம் திருவுள்ளூரே யாகும் இது சென்னை-அரக்கோணம் ரயில் மார்கத்திலேயே சென்னைக்கு 42 கி மீ. தொலைவில் உள்ளது. திருநின்றவூரிலிருந்து 13 கி. மீ. தொலைவில் உள்ளது. திருவுள்ளூருக்கும் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து இரண்டு மைல் தூரம் நடக்க வேண்டும். எனவே நாம் இங்கிருந்து டவுன் பஸ்ஸில் போகலாம்.

**பார்த்தன் :** கண்ணா நீ எப்படி அழைத்து செல்கிறாயோ அப்படியே நான் வரக் கடமைப் பட்டவன். போய்ச் சேரும் வரை அவ்வூரைப் பற்றிய சந்தேகங்களைக் கேட்கிறேன். இவ்வூர் பொதுவாக திருவள்ளூர் என்றே வழங்கப்படுகிறதே. அந்தப் பெயர் சரிதானா?

**கண்ணன் :** இவ்வூரை ஆழ்வார் பாடும் போது "எவ்வுள்" என்றே அருளியிருக்கிறார். எனவே இதன் சரியான பெயர் திரு எவ்வுளூர் என்பதே. எம்பெருமானின் சாவி

ஹோத்ர மாமுனிவனுக்கு ப்ரத்யக்ஷமாகி "நான் வசிப்பதற்கு உரிய உள் எவ்வுள்?" என்று வினவ, அம் முனிவனும் இவ் விடத்தையே காட்டினனாம். எனவே இவ்விடம் திரு எவ்வுளூர் எனப்படுகிறது என்று கூறுவர். அதற்கேற்ப இவ் வூரை ஸம்ஸ்க்ருதத்திலும் "கிம்க்ருஹ க்ஷேத்ரம்" என்பர். மேலும் திரு உள்ள ஊர் திருவுள்ளூர் என்றாலும் தவறில்லை.

**பார்த்தன் :** இந்த திவ்ய தேசத்தின் புராண வரலாறு எத்தகையது?

**கண்ணன் :** இந்த திவ்யதேசத்திற்குப் புண்யாவர்த்த க்ஷேத்ரம், வீக்ஷாரண்ய க்ஷேத்ரம் என்ற பெயர்களுமுண்டு. இந்த க்ஷேத்ரத்தின் பெருமை மார்க்கண்டேய புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. அந்தப் புராணத்தில் சொல்லியுள்ள படி இந்த க்ஷேத்ரத்திற்கு ஒருவன் சென்று ஹ்ருத்தாபநாச புஷ்கரிணியில் தீர்த்தமாடி இவ்வூர் எப்பெருமானை வீர ராகவனையும் அவன் எழுந்தருளியுள்ள விஜய கோடி விமானத்தையும் ஸேவிப்பதனால், பூர்வ ஜன்மங்களில் செய்த பாபங்களின் பலனாக அவன் அனுபவித்து வரும் வயிற்றுவலி, தலை வலி, வருணம், பிறவிச் செவிடு, குருடு முதலிய எல்லா நோய்களும் பூண்டோடு அழிந்து ஆரோக்யம் அடையும். இது இன்றைக்கும் நாம் கண்கூடாக காண்கிற விஷயமாகும். இது பற்றியே இவ்வூர்ப் பெருமான் வைத்ய வீரராகவன் என்றே போற்றப்படுகிறான். அமாவாஸை தோறும் இங்கு பக்தர்கள் ஏராளமாகக் கூடித் தங்கள் ப்ரார்த்தனைகளைச் செலுத்தி மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணனையே மருந்தும் பொருளும் அமுதமுமாகப் பற்றித் தங்கள் நோய்களைத் தீர்த்துக் கொள்கின்றனர்.

**பார்த்தன் :** ஆகா! இவ்வளவு பெருமையுள்ள திவ்ய தேசத்தை இவ்வளவு அருகிலிருந்து கொண்டு இது நாள் வரை தெரிந்து கொள்ளாமலிருந்தது என்னுடைய துர்ப்பாக்கியமே.

ஆனால் எவ்வுளவுதான் பெருமைகளிருந்தாலும் ஆழ்வார்கள் பாடா விட்டால் திவ்யதேசமாக முடியாதே. அதுவன்றோ உண்மையான பெருமை. அந்த விஷயத்தில் இவ்வூர்ப் பெருமானுடைய பாக்கியம் எப்படியோ?

**கண்ணன் :** திருமழிசை யாழ்வார் நான்முகன் திருவந்தாதியில் (36) "நாகத்தணை...திருஎவ்வுள்" என்ற பாசுரத்தாலும் திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் (2—2) "காசையாடை" என்ற பதிகத்தாலும், பெரிய திருமடலில் "என்னுடைய இன்னமுதை எவ்வுள் பெருமலையை" என்றும் இவ்வூர்ப் பெருமானைப் பாடியுள்ளார்கள். வேதாந்த தேசிகரும் இவ்வெப பெருமானைப் பற்றி "கிம்க்ருதேச ஸ்துதி" என்றொரு ஸ்தோத்ரம் அருளியுள்ளார். சரி, ஊர் வந்து விட்டது. பஸ்ஸிலிருந்து இறங்குவோமா!

**பார்த்தன் :** கண்ணா இதோ தெரியும் குளம் மிகவும் ப்ரம்மாண்டமாக உள்ளதே. மிகவும் நேர்த்தியாகவும் உள்ளதே. இதுதான் இக்கோவிலின் புஷ்கரிணியா?

**கண்ணன் :** ஆம் பார்த்தா! இந்த திவ்யதேசம் ஸ்ரீ அஹோபிலமடம் அதீன பரம்பரையைச் சேர்ந்தது. இப்போது எழுந்தருளியிருக்கும் அஹோபிலமடம் ஜீயர் ஸ்வாமி இந்த திருக்குளத் திருப்பணியைத் தாமே முன்னின்று ஆச்சர்யமாக நடத்தி வைத்துள்ளார். அதனால்தான் இக்குளம் இவ்வளவு நேர்த்தியாகவுள்ளது. ஹ்ருத்தாபநாச புஷ்கரிணி என்று பெயர். இதில் தீர்த்தமாடிவிட்டு கோவிலினுள் செல்வோம்.

**பார்த்தன் :** மற்றைய விவரங்களையும் சொல் கண்ணா.

**கண்ணன் :** த்வஜஸ்தம்பத்தைக் தாண்டி உள்ள மண்டபம் ரங்க மண்டபம். பெரிய திருவடி, த்வாரபாலகர்

களை ஸேவித்துவிட்டு திருவுண்ணாழிப் பிரதட்சிணமும் செய்வோம் வா. இங்கு சித்திர வடிவிலுள்ள ஸ்தலபுராணத்தையும் பார். அதோ ஆதிசேஷனாகிற படுக்கையில் சயனித்துக் கொண்டிருக்கும் மூலவர் வீரராகவனை ஸேவி. வலது திருக்கையை சாலிஹோத்ர மஹாமுனிவரின் தலைமீது வைத்திருக்கிறார். நான்முகனுக்கு வேதங்களை உபதேசிக்கும் வண்ணமாக இடது திருக்கையில் ஜ்நாந முத்திரையோடு சயனித்துள்ளார். முன்னால் மிக அழகாக எழுந்தருளியிருக்கும் உத்ஸவரையும் ஸேவி. பெருமாள் திருநாமம் எவ்வுள் கிடந்தான்—வீரராகவன். தாயார் திருநாமம் கனகவல்லித்தாயார்.

**பார்த்தன் :** இங்கு விசேஷ உத்ஸவங்கள் ?

**கண்ணன் :** ஒவ்வொரு அமாவாசையுமே இங்குவிசேஷம் தான் என்றாலும் தை அமாவாசை மிகவும் விசேஷமானது. சித்திரை மாதம் சித்திரை நக்ஷத்திரம் தீர்த்தவாரியாக பத்து நாட்கள் ப்ரம்மோத்ஸவம் நடைபெறுகிறது. ஒவ்வொரு மாதமும் சித்திரை நட்சத்திரத்தன்று புறப்பாடு உண்டு. மற்றபடி தெப்போத்ஸவம், வஸந்தோத்ஸவம், பவித்ரோத்ஸவம், பல்லவ உத்ஸவம் முதலிய பலஉத்ஸவங்கள் விமரிசையாக நடைபெறுகின்றன. இவ்வூரிலும் திருநின்றவூரைப் போலவே ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமப்படியே நடைபெறுகிறது.

**பார்த்தன் :** ஆகா ! உன்னுடைய கருணையால் ஒரே நாளில் திருநின்றவூர் திருவள்ளூர் ஆகிய இரு திவ்யதேசங்களையும் சேவிக்க முடிந்தது. அதோடுமட்டுமல்லாமல் இவ்வளவு விவரங்களையும் நான் தெரிந்து கொள்வதற்கும் காரணமாயிருப்பவன் நீயே அல்லவா !

**கண்ணன் :** சரி, சரி. என்னைப் புகழ்வதிருக்கட்டும். பொழுதாகிவிட்டது. சென்னை சேர்வதைப் பார்ப்போம். வா.

# திருப்பாவையின் சிறப்பு

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவை தேன் தமிழின் தித்திக்கும் நூல்களில் முதன்மையானது. 'பக்திச்சுவை சொட்டச் சொட்ட முத்திப் பதம் கிட்டக் கிட்ட'ப் புனையப் பட்ட முப்பது கவிதைகள் கொண்ட நறுமணச் சொல்மாலை திருப்பாவை. அதில் நாம் ஆண்டவனின் அவதார விசேஷங் களை அனுபவிக்கிறோம், செந்தமிழ்க் கவிதைச் சுவையைப் பருகுகிறோம். இப்படிப் பல இன்பங்களில் மூழ்கிப் பேரின்பத் தில் திளைக்கிறோம்.

## சாண்டில்யன்

இவ்வகையில் நம்மைப் பேரின்பத்திற்கு அழைத்துச் செல்லும் ஸ்ரீ ஆண்டாளின் சிறப்பு அளவற்றது. வியாக்கியானச் சக்கரவர்த்தியான ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீ ஆண்டாளின் பெருமையைப் பற்றி விவரிக்கையில், "தேக நலத்தில் சிரத்தையுடைய சாதாரண மனிதர்களைவிட ஆத்ம சொரூபம் அறிந்த ரிஷிகள் பல மடங்கு உயர்ந்தவர்கள். ரிஷி களைவிட ஆழ்வார்கள் பன்மடங்கு உயர்ந்தவர்கள். மற்றைய ஆழ்வார்களைவிட பெரியாழ்வார் எத்தனையோ மடங்கு உயர்ந்தவர். அந்தப் பெரியாழ்வாரைவிட ஸ்ரீ ஆண்டாள் அநேக மடங்கு உயர்ந்தவள்" என்கிறார். எத்தனை மடங்கு உயர்ந்தவள் என்பதைக் குறிப்பிடும்போது, "பர்வத பரமாணு வோட்டை வாசிபோரும்" அதாவது அவள் மலை, மற்றவர் தூசி என்று மிகவும் சிறப்பித்துச் சொல்லுகிறார். நமது பெரி யோர்கள் ஆழ்வார்கள் எல்லோரையும்விட ஸ்ரீ ஆண்டாளுக்கு ஏற்றத்தைக் கொடுத்ததற்குக் காரணம் உண்டு.

நமது பக்தி நூல்கள் எல்லாம் நாயக நாயகி பாவத்தை அஸ்திவாரமாகக் கொண்டவை. ஆண்டவன் இயக்க நாம் இயங்குவதால் அவனை நாயகனாகவும் தங்களை நாயகிகளாகவும் கொண்டு அந்த உறவின் மூலம் பேரின்பத்தைக் கண்டார்கள்.

நம் பெரியோர்கள் 'ஹரிர்யதைகப் புருஷோத்தம ஸ்ம்ருதோ'' —ஹரி ஒருவன்தான் புருஷோத்தமன் எனப்படுகிறான் என்று ரகுவம்சத்தில் காளிதாஸனும் சொல்கிறான். அந்தப் பரம புருஷனுக்கு நாம் நாயகிகள். இந்த பாவத்தால் ஆழ்வார்கள் தங்களை நாயகிகளாக நினைத்துக் கொண்டு பரமனைப் பாடினார்கள். புருஷன் பெண் வேஷம் போடுவதைக் காட்டிலும் பெண்ணே பெண் பாத்திரத்தைத் தாங்குவது எத்தனை இயற்கை! ஆகவே நாயகிகளாகத் தங்களைப் பாவித்துக் கொண்ட ஆழ்வார்களைவிட, பெண்ணாகவே பிறந்த ஸ்ரீ ஆண்டாள், ஆண்டவனை நாயகனாக எண்ணி உறவாடி மகிழ்ந்தது சாலச் சிறந்தது அல்லவா! அதனால்தான் ஸ்ரீ ஆண்டாளின் தெய்விகக் கற்பனைக்கு அதிக இயற்கையையும் அதிக ஏற்றத்தையும் பூர்வாசிரியர்கள் கொடுத்தார்கள். அந்த இயற்கையுடன் ஸ்ரீ ஆண்டாளுக்கு விரக்தியும் கலந்து கொண்டது. ''உன்னித்தெழுந்த என் தடமுலைகள் மானிடவர்க்கு என்று பேச்சுப் படில் வாழகில்லேன்''—என்னுடைய அங்கலாவண்யங்கள் சிற்றின்பத்திற்கு என்று பேச்சு வந்தால் நான் உயிர் வாழ மாட்டேன் என்று பருவ வயதில் சொல்லுமளவுக்கு ஸ்ரீ ஆண்டாளின் மனப்பக்குவம் உயர்ந்திருந்தது. அத்தகைய உயர்ந்த மனத்திலிருந்து ஆண்டவனைப் பற்றி எழுந்த பேரின்பக் கனவுகள், பேரின்ப உறவுகள், கவிதைகளாய் வடிந்தன. அப்படி வடிந்த கவிதைகளில் முப்பது திருப்பாவையெனும் பக்திக் கிரந்தம்.

திருப்பாவைக் கிரந்தம் ஆற்றுப்படை என்ற இலக்கண விதியைச் சாரும். 'ஆற்றுப் படுத்துதல்' என்பதற்கு வழி தெரிந்தான் ஒருவன் வழி தெரியாதவனுக்கு வழிகாட்டி அழைத்துச் செல்லுதல் என்பது பொருள். ஆண்டவனை அடையும் வழியை அந்த ஸ்ரீ ஆண்டாள் அவ்வழி அறியாத நமக்குப் பகவத்கைங்கர்ய வழியைக் காட்டுகிறாள், அதாவது ஆற்றுப்படுத்துகிறாள். ஆகவே இந்தக் கிரந்தம் 'ஆற்றுப்படை'

என்ற பகுதியைச்சாரும். இந்தத் திருப்பாவைக் கிரந்தத்தில் 'பாவை நோன்பு' என்ற முகாந்திரத்தை வைத்துக் கொண்டு ஸ்ரீ கிருஷ்ண பகவானுடன் ஆய்ச்சியர்கள் எப்படிக் கலந்து உறவாடினுர்கள் என்ற கதையைச் சொல்லுகிருள் ஸ்ரீ ஆண்டாள். 'பாவை நோன்பு என்பது பழந்தமிழர்கள் அனுஷ்டித்து வந்த நோன்பு. மார்கழி மாதத்தில் பருவப் பெண்கள் மழை பெய்து நாடு செழிக்கவும், தகுந்த கணவனைத் தாங்கள் பெறவும், ஆற்றுக்குச் சென்று நீராடி அங்குள்ள ஈர நுண்மணலால் பாவையொன்றைப் பிடித்து அதை வழிபடுவது வழக்கம்.

இந்த நோன்புக்கு வேதப் பிராமணம் கிடையாது. ஆகவே இதற்குப் பிராமணம் சொல்லும் பெரியவாச்சான் பிள்ளை. "இந் நோன்புக்கு மூலம் என்னென்னில் மீமாம்ஸை யிலே ஹோளாதிகரண நியாயத்தாலே சிஷ்டாசார ஸித்தம்" என்று கூறுகிருர். ஹோளி ஹோளகம் என்ற காமன் பண்டிகை வடநாட்டில் வஸந்தருதுவில் கொண்டாடப்படு கிறது. இதற்கு வேதவிதி கிடையாது. ஆனல் பெரியவர்கள் கால முதல் அனுஷ்டானத்திருந்து வருகிறது ஆகவே வேத விதியில்லாது போனுலும் இது செய்யத் தகுந்தது என்று நிர் மானிக்கப்பட்டது. அந்த நியாயம் பாவை நோன்புக்கும் உண்டு என்று நிர்மானிக்கிருர் ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை. இது சிஷ்டாசாரசித்தம்; பெரியவர்கள் அனுஷ்டித்தது. ஆகவே அனுஷ்டிக்கத் தகுந்தது' என்று சொல்லுகிருர். ஸ்ரீ ஆண்டாளும் இதையே, "மேலையார் செய்வனகள்" என்று திருப்பாவையில் குறிப்பிடுகிருள்.

இந்தப் பாவை நோன்புக்கு வேத ஆதாரமில்லா விட்டாலும் புராண ஆதாரமிருக்கிறது. ஸ்ரீமந் பாகவதம், தசமஸ்கந்தம், 22ஆம் அத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ள காத்யாயனீ விரதமும் இதைப் போன்றதே. கோகுலத்துப்

பெண்கள் விடியற்காலையில் ஒருவரையொருவர் அழைத்துக் கொண்டு யமுனையில் நீராடி ஆற்று மணலில் தேவி சிலை பிடித்து நோன்பு நோற்று ஸ்ரீகிருஷ்ணனையே பர்த்தாவாக அடைந்தார்கள் எனக் கூறப்படுகிறது.

பாவை நோன்புக்குச சங்க நூல்களிலும் ஆதாரமிருக் கிறது. இதை மார்கழி நோன்பாகிய தைந்நீராடல் என்று பழந்தமிழர் அழைத்து வந்தார்கள். பரிபாடலில் வையை ஆற்றின் சிறப்புக் கூறும் பாடலிலே ஆசிரியர் நல்லந்துவனர். "தாயருகா நின்று தவத்தைத் நீராடுதல் நீயுரைத்தி வையை நதி" என்று தெரிவிக்கிருர். கன்னிப் பெண்கள் சங்க காலத் தில் தைந்நீராடி நோன்பு நோற்றதை இப்பாட்டு உணர்த்து கிறது. இது தவிர பெண்பிள்ளைப் பாட்டின் செய்தி கூறும் பிங்கலந்தை சூத்திரத்துள் "பேணும் சிறப்பில்" என்று தொடங்கும் பாட்டில், "பனிநீர் தோய்தலும். பாவை யாடலும்" என்ற அடி வருகிறது.

பாவை நோன்புக்கு இப்படியாகப் பழைய சான்றுகள் பல உள்ளன. இது வடநாட்டிலும் தென்னுட்டிலும் முன்ஞேர் அனுஷ்டித்து வந்த ஒரு விரதம் என்பது தெளிவாகிறது. அத் தகைய ஒரு நோன்பைக் காரணமாக வைத்து கொண்டு ஸ்ரீ ஆண்டாள் நமக்கு அருமையான இந்த முப்பது பக்திப் பாடல்களை அளித்திருக்கிறுள்.

# ஸ்ரீ பாஷ்யம்

## (முன்னுரை)

வேதமானது கர்மகாண்டம் என்றும், ப்ரம்மகாண்டமென்றும், இரு வகுப்பாக உள்ளது. முன்பாகம் கர்மகாண்டமென்றும் பின்பாகம் ப்ரம்மகாண்டமென்றும் வழங்கப்படும். பகவானை ஆராதிக்கும் முறைகளான யாகம், யக்ஞம் முதலியவற்றை தெரிவிக்கும் வேதபாகம் கர்மகாண்டமாகும். அந்த கர்மகாண்டத்தில் ஆராதிக்கப்படுகின்ற பகவானுடைய திரு உருவம், குணங்கள், முதலியவற்றை விரிவாகக் கூறும் வேத பாகம் அதாவது உபநிஷத்துக்கள் முதலியவை ப்ரம்ம காண்டமாகும்.

## P. B. அண்ணங்கராசாரியர்

கர்ம காண்டத்தில் தோன்றும் சந்தேகங்களைப் போக்குவதற்காக ஜைமினி என்ற மகரிஷி பதினாறு அத்யாயங்கள் கொண்ட ஒரு நூலை இயற்றினார். அதற்கு 'பூர்வ மீமாம்ஸை' என்று பெயர். ப்ரம்மகாண்டம் எனப்படும் உபநிஷத்துக்களில் தோன்றும் சந்தேகங்களை போக்குவதற்காக வியாஸர் என்ற மகரிஷி நான்கு அத்யாயங்கள் கொண்ட ஒரு நூலை இயற்றினார். அதற்கு 'சாரீரக மீமாம்ஸை' என்று பெயர். இது உத்தர மீமாம்ஸை என்றும் ப்ரஹ்ம ஸூத்ரம் என்றும் வழங்கப்படும்.

தத்வ ஹித புருஷார்த்தங்களை நாம் தெரிந்து கொள்வதற்கு உபநிஷத்துக்களே சாதனங்களாகும். அவ்வுபநிஷத்துக்களின் பொருள்களை ஸந்தேகத்துக்கு இடமில்லாமல் விளக்குவது இந்த ப்ரம்மஸூத்ரமே. இதை நன்கு அறிந்தவர்களே ஞானிகளென்றும் வேதாந்திகளென்றும் சொலலத் தகுதியுடையோர். ஆனால் ரிஷிகளினால் இயற்றப்பட்ட ப்ரஹ்ம ஸூத்ரங்களின் பொருளை நம்போல்வார் சிறிதும் அறியகில்லாதவர்களாதலால், நம்போன்ற சிற்றறிவு படைத்தவர்களுக்கும் புரியும்படி ஸூத்ரங்களின் அர்த்தங்களை விளக்கி பாஷ்யங்கள் (விரிவுரைகள்) இயற்றியுள்ளனர் பெரியோர்.

ஒவ்வொரு மதத்துப் பெரியாரும் தத்தம் மதக்கோட்பாடுகளின்படி விரிவுரை எழுதியுள்ளனர். அத்வைத மதத்திற்காக சங்கராசார்யரும் த்வைத மதத்திற்காக ஆநந்த தீர்த்தரும் (மத்வாசார்யர்) பாஷ்யங்கள் இயற்றியுள்ளனர். நமது விசிஷ்டாத்வைத மதத்திற்காக ஸ்ரீராமாநுஜர் பாஷ்யம் அருளிச் செய்திருக்கிறார். அதுவே ஸ்ரீபாஷ்யமென்று அனைவராலும் போற்றப்படுகிறது. விசிஷ்டாத்வைதிகளென்றும் ஸ்ரீவைஷ்ணவர்களென்றும் வழங்கப்படுகின்ற நமக்கு ஸ்ரீராமாநுஜருடைய ஸ்ரீபாஷ்யமே உயிரானது என்பது சொல்லாமலே விளங்கும். உபநிஷத்துக்களின் உண்மைப் பொருளை விளக்கி வியாஸருடைய உள்ளக் கருத்தை பக்ஷபாதமில்லாமல் நிரூபிப்பது ஸ்ரீபாஷ்யமே என்று மேனாட்டுப் புலவர்களும் மெச்சியுள்ளார்கள்.

[இப்படிப்பட்ட ஸ்ரீபாஷ்யத்தின் எளிய தமிழாக்கம் அடுத்த இதழ் முதல் தொடர்ந்து வெளிவரும். தமிழாக்கம் செய்பவர் ஸ்ரீமான் க. சந்தானம், முன்னாள் ஸ்வராஜ்யா ஆசிரியர்].

# தேவு மற்றறியேன் — 9

ஆசார்யனைவிட மேலான தெய்வம் ஒன்றில்லை என்ற திடமான நம்பிக்கையுடன் வாழ்க்கை நடத்துமவனுக்கு திருமாமகள் கொழுநன் தரும் வைகுந்தமாகிற பேறு தப்பாது என்ற சீரிய அர்த்தத்தை நம் பூர்வர்களான பெரியோர்கள் எப்படித் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்து நமக்கும் வழிகாட்டிகளாக அமைந்தனர் என்பதைப் பல கட்டுரைகளில் இதுவரை அநுபவித்தோம். இந்த அர்த்தத்துக்கு மூலம், "மதுரகவி சொன்ன சொல்" ஆன கண்ணிநுண் சிறுத்தாம்பு என்ற சிறந்த ப்ரபந்தமாகும். பத்தே பாசுரங்கள் கொண்ட இந்தப் ப்ரபந்தத்துக்குப் பல மஹாசார்யர்கள் வ்யாக்யானம் ஸாதித்துள்ளதே இதன் சிறப்புக்குச் சான்று. நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் இந்நால்வரும் அருளிச் செய்துள்ள வ்யாக்யானக் கடலிலிருந்து சில திவலைகளை இனி அநுபவிப்போம்.

**Dr. V.V. ராமானுஜம்**

இந்த ப்ரபந்தத்துக்கு விஷயம் ப்ரபன்னகுலத் தலைவரான நம்மாழ்வாரின் பெருமைகளை ஆழ்வாருடைய சீர்மையைப் பற்றி ஓரளவு முன்னமே பேசியுள்ளோம். ஆழ்வாருக்கு அந்தரங்க சிஷ்யராய், அவர் ஹ்ருதயத்தை நன்கறிந்தவர் மதுரகவிகள். ஆழ்வார் பாடிய நூறு திருவாய்மொழிகளில் அவர் மிகவும் உகந்து போற்றியவை எவை என்பது மதுரகவிக்கே தெரியும். மேலும் ஆசார்யருசி பரிக்ருஹீதமான (மிகவும் அபிமானித்த) அர்த்தத்தை சிஷ்யன் போற்றி ஆதரித்து அதன்வழி ஒழுகக் கடவன் என்பது ஸத்ஸம்ப்ர

தாயம். ஆழ்வார் தமக்கு மிகவும் அபிமதமான அர்த்தத்தை பயிலும் சுடரொளி (3-7), நெடுமாற்கடிமை (8-10) என்ற பதிகங்களில் வெளியிட்டார். இப்பதிகங்களுக்குத் திருமாலடியார்களான மெய்யன்பர்களின் (ததியர்களின்) சிறப்பைப் பேசுவதிலே நோக்கு. இவர்களில் தலைவரானவரும், தமது ஆசார்யரானவருமான குருகூர்ச்சடகோபனுடைய ஒப்பில்லாத பெருமைகளையும், அவர் தமக்கு எப்படி எல்லாம் உபகாரம் பண்ணினார் என்பதையும் வாயாரப் பேசி அநுபவிப்பது இந்த ப்ரபந்தம்.

நிற்க. ஆசார்யருசிபரிக்ருஹீதமான அர்த்தமே சிஷ்யனுக்கு பரம உபதேசமாக வேண்டியது என்ற ஸதாசாரத்தை நம் முன்னோர்கள் நடத்திக் காட்டியுள்ளதை அருளிச் செயல் வ்யாக்யானங்களில் கூறப்பட்டுள்ள சில சரித்திரங்களைக் காட்டி மூதலிப்போம்.

பிதாமஹரான பீஷ்மர் அம்புப்படுக்கையில் தமது தேஹத்தை விடுவதற்கான நாளை எதிர்நோக்கிக் கிடக்கையில் தர்மபுத்ரர், "கோ தர்ம: ஸர்வதர்மாணாம் பவத: பரமோ மத:" (சாஸ்த்ரவிஹிதமான தர்மங்களில் — உய்வதற்கான உபாயங்களில் — எது மிகச் சிறந்தது என்று தேவரீர் எண்ணம்?) என்று வினவ, தேவகீநந்தனனான கண்ணனை எதிரில் வைத்துக்கொண்டு, இந்த பகவானை உள்ளுறை பொருளாகக் கொண்ட ஸ்ரீஸஹஸ்ரநாம ஸங்கீர்த்தனமே எனக்கு மிகவும் அபிமதமான உயர்ந்த தர்மம் — "ஏஷமே ஸர்வ தர்மாணாம் தர்மோதிக தமோமத:" — என்று உபதேசித்தார். (ஸ ஸி. தா. அவதாரிகை).

சொல்லார் தமிழ் ஒரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா அறநெறி யாவும் தெரிந்த நம்மிராமாநுசன், தனக்கு ஆசார்ய ப்ரபாவத்தை உபதேசித்த திருவரங்கப் பெருமாளுடைய அந்திம தசையிலே, "இப்போது தேவரீர் நெஞ்சிலோடு

வது என்?" என்று வினவ, அவரும், "பகவந்நாமங்கள் தான் பல பலவாயமைந்திருக்க, **திருவரங்கம்** என்று சில அக்ஷரங்கள் சேர்ந்து ஒரு திருநாமமாய் அமைந்த அழகையெண்ணி உருகி நிற்கிறேன்" என்றாராம். ஆசார்யன் உகந்த திருநாமம் என்று இத்திருநாமத்தைப் பெரிதும் மதித்திருந்தாராம் உடையவர் (பெரியா. திரு. 4-4-1).

திருக்கோட்டியூர் நம்பியின் ஸ்ரீபாதத்திலவரான (சிஷ்யரான) **வளவன் பல்லவதரையன்** என்பவர் நஞ்சீயரிடம் ஒரு உரு திருவிருத்தம் காலக்ஷேபம் கேட்கையில் 95-ம் பாசுரமான **யாதானுமோராக்கை** என்பதை இயல் சொன்னவாறே கண்ணும் கண்ணீருமாய்புலகிதகாத்ரராய் இருக்க, ஜீயரும், 'பாசுர விளக்கத்தை அநுபவிக்கு முன்னமே இப்படி இருக்கைக்கு அடி என்ன?" என்று கேட்க, அரையனும், "எமதாசார்யரான நம்பி நல்கின நல்லுபதேசங்களில், இப்பாசுரத்தை அநுதினம் எம்பெருமான் திருமுன்பே விண்ணப்பம் பண்ணும்படி நியமனமும் ஒன்று. இப்பாட்டின் பொருள் எனக்குப் போகாது. ஆயினும் ஆசார்யனுகந்தபாசுரம் என்று இதைக் கேட்கும்போதெல்லாம் இப்படி இருப்பேன்" என்று பதில் சொல்ல, திருக்கோட்டியூர் நம்பி உகந்த பாசுரம் என்று நஞ்ஜீயரும் இப்பாசுரத்தைக் கொண்டாடிப் போருவராம். (திருவிருத்தம் 95).

த்ரிபுரா தேவியார், வடகீழ் மூலையில் தத்வமாயினும் (காடிச்சால் மூலையில் தெய்வம்) எம்பெருமானார் ஆதரித்தால் ஆச்ரயணீயமாகக் கடவது என்று சொன்னது முன்னமே பேசப்பட்டது. சதுச்சாஸ்த்ர வித்வானான கூரத்தாழ்வானும், நாம் தேவதாந்தர பஜனம் பண்ணாதது நமது முன்னோர்கள் அது செய்யாமையாலே என்றருளிச் செய்தார்.

(திருப்பாவை-2)

கண்ணிநுண் சிறுத்தாம்பின் மையக்கருத்தான சீரிய அர்த்தத்தை வேதார்த்தம் அறுதியிட உபப்ரும்ஹண சாஸ்த்ரமாய் அவதரித்த ஸ்ரீராமாயணத்திலும் அநுஷ்டானத்தில்

காணலாம். பித்ருவசனபரிபாலனம் முதலான ஸாமான்ய தர்மத்தை அநுஷ்டித்தார் பெருமான். வகுத்த விஷயத்தில் அடிமை அவன் நிர்ப்பந்தித்தாலும் பிரியாதிருந்து ஆட்செய்ய வேணும் என்னும் தர்மத்தை அஹம் ஸர்வம் கரிஷ்யாமி என்று பாரித்த இளையபெருமாள் நடத்தையில் காணலாம். சேஷி (ஸ்வாமி) உகந்ததைச் செய்வதே சேஷபூதனுக்கு (சொத்தான நமக்கு) ஸ்வரூபம் என்ற விசேஷதர்மத்தை ஸ்ரீபரதாழ்வான் அநுஷ்டித்தார். தமக்குச் சிறிதும் ஒவ்வாத போதிலும் பெருமான் நியமனத்தைச் சிரமேற்கொண்டு ராஜ்யத்தை 14 ஆண்டுகள் ரக்ஷித்தவரன்றோ இவர்? பெருமானுக்கு நல்லவனான பரதனையே தன்னையாளும் நாதனாகக் கொண்டது ஸ்ரீசத்ருக்னாழ்வானின் மிகவுயர்ந்த அநுஷ்டானம். இந்த அநுஷ்டானத்தின் சீர்மையை விளக்க நமது ஆசார்யர்கள், "கச்சதா மாதுலகுலம்" என்ற (அயோ—21—1) சலோகத்தைக் காட்டி ஆச்சர்யமான விளக்கமும் தந்துள்ளனர்.

**கச்சதா மாதுலகுலம் பரதேந ததாநக: ।**
**சத்ருக்நோ நித்ய சத்ருக்ந: நீத: ப்ரீதிபுரஸ்க்ருத: ॥**

தாய்மாமன் வீட்டைக் குறித்துச் செல்லும் பரதனால் தோஷமற்றவனும், எப்போதும் இந்த்ரியங்களான சத்ருக்களை அடக்கியவனுமான சத்ருக்னன் ப்ரீதியால் தூண்டப்பட்டவனாக அழைத்துச் செல்லப்பட்டான்.

பரதனுடைய மாமன் அவனை தன் ராஜ்யத்துக்கு அழைத்தான். அவன் செல்ல, அவனை விட்டுப்பிரிந்திருக்கமாட்டாமல் சத்ருக்னனும் பின் சென்றான். பரதன் பிறந்த நக்ஷத்ரத்துக்கு பயணத்துக்காக இட்ட நல்லோரையில் இவனும் கிளம்பினான். அநக: பாபமற்றவன், தோஷமற்றவன். இவனுக்கு என்ன பாபம் இருக்கக் கூடும்? அவரவர் இஷ்டத்துக்குத் தடையாயுள்ளது பாபமாகும். பரதனையே எல்லாமாகப் பற்றுவதற்குத் தடையாக ராமபக்தியை—அவன் குணங்களிலும் அழகி

னும் அழுங்கால் பாதுகையை — செல்லலாம். அந்த பாபம் இவனிடம் இல்லை. சுமித்ராதேவியும், இளையபெருமாளுக்கு வனம் செல்ல இசைவு தந்தபோது "ராமகைங்கர்யத்துக்கு அவன் திருமேனியழகும் நடையழகும் இடைச்சுவராயிருக்கும்; அவற்றில் கண்வையாதே" என்று எச்சரித்தாள். ராமகைங்கர்யத்துக்கே இவை தடையானால் பரத கைங்கர்யத்துக்குச் சொல்லவேண்டாமன்றோ? **நித்ய சத்ருக்ன:** தனது இந்த்ரியங்களைப் பூர்ணமாக ஜயித்தவன். "புருஷாணாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்" என்று அனைவரின் நெஞ்சங்களையும் கொள்ளை கொண்ட ராம ஸௌந்தர்யத்தில் கண்வையாதவன்; அதில் பயங்காதவன். **அங்க** என்றால் பரதன் ராமனை விட பரமபாவனமானவன் என்பதும், **நித்ய சத்ருக்ன:** என்பதால் ராமனைவிட பரதன் இனியவன் என்பதும் காட்டப்படுகின்றன. **நீத:** — அழைத்துச் செல்லப்பட்டான். அதாவது எடுத்துச் செல்லப்படும் ஆயுதங்கள் போன்றும், அழைத்துச் செல்லப்படும் மிருகங்கள் போன்றும் அவன் இவன் பரிக்ர ஸ்ருதனைச் சென்றான். ராமன் விஷயத்தில் எல்லா அடிமைகளும் செய்ய வேணும் என்று பாரித்துச் சென்றான் இளையோன். அப்படியே பரதன் விஷயத்தில் செய்யவேணும் என்ற பாரிப்பு இல்லை. "படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே!" என்பதே இங்கும். படியாய் கிடந்து என்பதை **நீத:** என்பதன் அர்த்தமும், பவளவாய் காண்பேனே என்பதை **ப்ரீதிபுரஸ்க்ருத:** என்பதன் அர்த்தமும் பின் செல்பவை.

எம்பெருமானார் இந்த ச்லோகத்துக்கு வாக்யார்த்தமாக, "ஸ்ரீ சத்ருக்நாழ்வான் பெருமானுக்கு நல்லனுமல்ல, அவனை உகந்து அறியாத ஸ்ரீ பரதாழ்வானையல்லது வேறொன்றறியாதபடியானான்" என்று அருளிச் செய்தார். ஒருவன் (தன்னைப் போன்ற) மற்றொருவனை உத்தேச்யமாகக் கொள்வது ஒட்டை ஓடமும் ஒழுகல் ஓடமும் சேருமாப்போலே. உத்தேச்யமாகப் பற்றப்பட்டவன் பரமபாகவதனாகில் (கீதையில் கண்ணனை தனதாத்மாவாகப் போற்றும் ஞானி), அவனை அநுவர்த்திப்பது பகவானை அநுவர்த்திப்பதிலும் சிறப்பே.

(தொடரும்)

# கீதாசார்யன் பதில்கள்

**K.E.B ரங்கராஜன்** — சென்னை—78.

*திருநின்றவூருக்கு இரண்டே பாசுரங்கள் என்கிறீரே! பெரிய திருமொழி 10—1—8ல் "பத்தராவியை" என்று பாடியிருக்கிறாரே! அதுயாரை ?*

'பத்தராவி' என்பதற்கு பக்தர்களுடைய உயிர் போன்றவன் என்று பொருள். எனவே இது எம்பெருமானுக்கு வழங்கப் படும் ஒரு பொதுவான திருநாமமே. எனவே அது திருநின்ற வூர் எம்பெருமானையே குறிக்கிறது என்று கூறிவிட முடியாது. மேலும் 'திருக்கண்ணமங்கை' என்ற திவ்யதேசத்தில் எழுந் தருளியிருக்கும் எம்பெருமானுக்கும் பத்தராவி என்றுதான் பெயர். ஆழ்வார் ஊர்பெயரைவிட்டு மங்களாசாஸனம் செய் திருப்பது இரண்டே பாசுரங்களில்தான்.

**S. வெங்கடராமன்** — செகந்திராபாத்.

*ஆசிரியரை அடிக்கடி வம்புக்கிழுக்கும் இந்த ஆலவாயன் யார் ?*

நாலாயிர திவ்யப்பிரபந்த உபந்யாசங்களை பட்டர் என்கிற ஆசாரியர் அருளிச் செய்து கொண்டிருந்தபோது 'ஆலவாயன்' என்பவன் எழுந்து தனக்கு ஏற்படும் சந்தேகங்கக் கேட்டதாக நாலாயிர வியாக்கியானங்களில் குறிக்கப்படுகிறது. (அவன் ஒரு தமிழ்ப் புலவன்) அவனே தொடர்ந்து நமது ஆசிரியரை யும் (கற்பனையில்) அடிக்கடி வம்புக்கிழுக்கிறான்.

# ஆழ்வானும் பிள்ளைகளும்

R. வேங்கட ராமாநுஜன்

இங்கு ஆழ்வான் என்றது கூரத்தாழ்வானைக் குறிக்கும். திருவாழியாழ்வான் திருவனந்தாழ்வான் என்று விண்ணாட்டிலுள்ள மூதுவரான நித்திய சூரிகளுக்கு வழங்கும் ஆழ்வான் என்ற திருப்பெயர் இவருக்கு வழங்கி வருவதால் இவர் அவர்களோடு ஒத்தவர் என்று புலனாகிறது. தங்கள் பக்தியின் மிகுதியினாலே எம்பெருமானிடத்தில் ஆழ்ந்தமை பற்றி ஆழ்வான் என்ற பெயர் அவர்களுக்கு வந்தது. இவரும் எம்பெருமானிடத்திலும் ஆசாரியனிடத்திலும் பக்தியின் மிகுதியால் ஆழ்ந்தனர் என்றது கருதி ஆழ்வான் என்று இவரை அழைக்கலாயினர் நம்முன்னோர். இவருக்குத் தந்தை இட்ட திருப்பெயர் ஸ்ரீவத்ஸசிஹ்நர் என்பது.

இவர் கூரத்தில் அவதரித்து, கூரத்திற்கு அதிபதியாய் வாழ்ந்தமையால் கூரேசர் 'கூராதி நாதர்' கூராதிபர் என்று போற்றப் படுகின்றார். எனினும் கூரத்தாழ்வான் என்றே தமிழில் மிக்கு வழங்கப்படுகின்றார். கூரேசர் அல்லது கூராதி நாதர் என்ற பெயர்கள், தமிழில் வந்தால் கூரத்தாள்வான் என்று தான் வர வேண்டும். அவ்வாறு வழங்கப் பெறாமையால், இது இவருக்குள்ள சிறப்புப் பெயர் என்று தெரிகிறது. ஆழ்வான் என்ற பொதுப் பெயரோடு கூரம் என்ற அடைமொழியும் சேரப்பெற்று கூரத்தாழ்வான் எனப் பெற்றனர். கூரத்தில் அவதரித்த ஆழ்வான் கூரத்தாழ்வான் என்க. "மொழியைக் கடக்கும் பெரும் புகழான் வஞ்சமுக் குறும்பாம் குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான்" என்று அமுதனார் இவரைப் புகழ்ந்து கூறுகின்றார். நம் கூரத்தாழ்வான் என்பதற்கு 'நமக்கு நாதரான கூரத்தாழ்வான்' என்று ஸ்வாமி

மணவாள மாமுனிகள் பொருள் உரைத்திருக்கிறார். அமுத னார் 'நம்' என்று கூறியது பின்னுள்ள அனைவரையும் நோக் கியே என்று தெரிகிறது.

இராமாநுசர் திருவடிகளில் முதல் முன்னம் ஆச்ரயித்த வர் இவர். ராமாநுஜரிடத்தில் பரம பக்தியுடையவராய்த் திகழ்ந்து நின்றது பற்றி, இவரை இராமாநுசருக்குத் திருவடி களாகக் கூறுகின்றார்கள். "ஸ்ரீவத்ஸ சிஹ்ந சரணம் யதி ராஜம்" என்ற விடத்தில் ஸ்ரீவத்ஸ சிஹ்ந சரணம் என்பதற்கு கூரத்தாழ்வானைத் திருவடிகளாக உடைய எதிராஜர் என்று திருமழிசை அண்ணா அப்பங்கார் ஸ்வாமி உரை அருளிச் செய்திருக்கிறார். ஒரு சிலர் மாற்றிக் கூறியிருக்கிறார்கள். சரணம் என்று சவர்க்க சகாரம் கொண்டு வழங்கி இருப்பதே நலம். கூரத்தாழ்வானைத் திருவடிகளாகவும் முதலியாண்டா னைப் பாதுகைகளாகவும் கொண்டு உடையவர் விளங்கினார் என்பது இப்பொழுது தோன்றும்; எனினும் இதனைப் பெரி யோர்களுடைய சிந்தனைக்கு விட்டு விடுகிறேன்.

இவர், தம்முடைய குமாரர்களான பட்டருக்கும் சீராமப் பிள்ளைக்கும் திருவாய் மொழியின் பொருளை அருளிச் செய்து கொண்டு வந்தார்; "எண் பெருக்கந் நலத்து"ப் பாசுரம் வந் தது. அப்பொழுது பட்டரையும் சீராமப் பிள்ளையையும் நோக்கி, "இத்தை உந்தம் ஆசாரியர்கள் பக்கலிலே கேட்டுக் கொள்ளுங்கோள்" என்ன, பட்டரும் சீராமப் பிள்ளையும் எழுந் திருந்து போகத் தொடங்க, அப்பொழுது அவர்களை அழைத்து 'இன்னபோது இன்னார் இருப்பார் இன்னார் போவார் என்று தெரியாதிருந்து கேளுங்கோள்' என்று பணித்து, திருமந்த் ரத்தை உபதேசித்து இப்பாட்டிற்குப் பொருள் கூறி, "இப் பாட்டைத் திருமந்திரத்திற்குப் பொருளாக நினைத்திருங் கோள்" என்று பணித்ததாகத் திருவாய் மொழியின் வியாக் யானமான ஈட்டில் ஒரு சரித்திரம் காணப்படுகின்றது. இதன் கருத்து யாது? என்பது இங்கு ஆராயப் படுகிறது.

ஆழ்வான், பிள்ளைகளை நோக்கி, 'நீங்கள் உங்களுடைய ஆசார்யர்களிடம் சென்று கேட்டுக் கொள்ளுங்கோள்' என்று அருளியதால், இப்பாட்டு, மந்த்ரார்த்த மென்பதும்; மந்த்ரார்த்தத்தை மந்த்ரோபதேச மூலமாகவே பெற வேண்டும் என்பதும்; அதற்குரியார் ஆசார்யரே என்பதும்; வேறு யாரும் மந்த்ரோபதேசம் செய்ய உரியரல்லர் என்பதும் விளங்குகிறது. பின்னர், அவர்களை அழைத்து, மந்த்ரத்தைத் தாமே உபதேசித்து, பாட்டின் பொருளையும் அருளிச் செய்து, 'இப்பாட்டைத் திருமந்த்ரத்தின் பொருளாக நினைத்திருங்கோள்' என்று பணித்திருப்பதால், இது மிக்க இனிமை வாய்ந்தது என்பதும்; ஆழ்வானுக்கும் இப்பாட்டை அருளிச் செய்யாமல் இருக்க இயலாமல் அருளிச் செய்திருக்கிறார் என்பதும் விளங்குகின்றது. இதனால், திருமந்த்ரத்தின் பெருமையைக் கருதி, முதலில் அவ்வாறு அருளிச் செய்தவர், பின்பு அதன் இனிமையைக் கருதி, விடமாட்டாமையால் அவர்களுக்கு அருளிச் செய்திருக்கிறார் என்பதும் தெளிவாகிறது. இந்த மந்த்ரத்தின் இனிமையைப் பற்றித் திருமங்கையாழ்வார் "எனக்கென்றும் தேனும் பாலும் அமுதமாய திருமால் திருநாமம் நானும் சொன்னேன் நமரும் உரைமின் நமோ நாராயணமே" என்று அருளியிருக்கிறார். தேன் போலவும் பால் போலவும் அமுது போலவும் எனக்குத் திருமால் திருநாமம் உள்ளது; என்னைச் சேர்ந்த நீங்களும் இனிமையான இதனைச் சொல்லுங்கள் என்கிறார். தேன் என்பது, பல கிளைகளில் உள்ள பூக்களில் நின்றும் எடுக்கப் படுகின்றது; அது போன்று திருமந்த்ரப் பொருளும் வேதங்கள் அனைத்திலுமுள்ள சாரப் பொருள் என்பது பெறப்படும். பால் சுத்தமானது; யாவரும் அதனைத் தீண்டலாம்; அது போன்று இதனைக் கற்கைக்கு உரியார் அனைவரும் என்பது பெறப்படும். அமுது என்பது, அதனை உண்டார்க்குச் சாவாமையைத் தரும்; அது போன்று இம் மந்த்ரப் பொருளைக் கற்றார்க்கு வீடு பேற்றினைத் தந்து என்றும் உளராம் தன்மையை இது அளிக்கின்றது. இத்த

கைய இனிமையால், ஆழ்வானுக்கு விட முடியாமல் இருந்த தால் பிள்ளைகளுக்கு இதனைத் தாமே உபதேசித்து விட்டார் என்று தெரிகிறது.

முதலில் "உங்கள் ஆசாரியரிடம் கேளுங்கள்" என்று கூறி, பிள்ளைகள் போக ஆரம்பித்தவுடனே "இன்னபோது இன்னார் இருப்பார் இன்னார் போவார் என்று தெரியாதிருந்து கேளுங்கோள்" என்று தாமே அருளிச் செய்தாராம். அதாவது மந்த்ரார்த்தைக் கேட்குப்போது இருப்பார் போவாரை நோக்காமல் குறிக்கொண்டு அன்போடு சவலித்துக் கேட்க வேண்டும் எனகிறார். இதைக் கருத்தில் கொண்டே "ஆழ்வானுடைய முந்தின வார்த்தைக்கு கௌரவ்யதையிலே நோக்கு, பிந்தின வார்த்தைக்கு போக்யதையிலே நோக்கு" என்பர் பெரியோர்.

With compliments from

# J. M. BAXI & CO.

2/21, NORTH BEACH ROAD
M A D R A S - 600 001.

Phone : 20016 4 (lines) Post Box
Telex : 626 & 416 Cobles : "BAXICO"

# எங்கள் சாளக்கிராம யாத்திரை

## K. R. ஸ்ரீனிவாஸாசாரி M. A.

ஆக இப்படியெல்லாம் பல பயமுறுத்தும் செய்திகள் முக்திநாத் (ஸாளக்கிராமம்) யாத்திரையைப் பற்றி வந்தாலும் எனது உறுதி தளரவில்லை. எப்படியும் ஒருமுறை ஸாளக்கிராமத்தை தரிசித்துவிடுவது என்ற ஒரு வெறி எனக்கு ஏற்பட்டுவிட்டது. எனக்கோ வயது 65 ஆகிவிட்டது. எனவே யாத்திரைக் களைப்பினால் ஸ்ரீ K. R. V. போல் நானும் வழியில் இறந்துவிட்டால் ....... அதைப் பற்றியும் நான் கவலைப்படவில்லை. எனினும் சென்ற வருடம் ஆசாரியன் திருவடியடைந்த எனது தாயாரின் வருஷாப்திகம் முடியட்டும் என்று காத்திருந்தேன். முடிந்தவுடன் யாத்திரைக்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தேன், 5-4-79 ஸ்ரீ ராம நவமியன்று சாளக்கிராமத்தில் இருக்க வேண்டும் என்பது என்னுடைய ஆசை. எனவே அதற்கான ஏற்பாடுகளை விரைவாகச் செய்ய வேண்டும் என்று கருதி 1-3-79 அன்று சென்னையிலிருந்து புறப்பட்டு கல்கத்தா சென்று எங்கள் பெண்ணுடன் தங்கலானேன். அங்கிருந்தபடியே யாத்திரைக்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்ய ஆரம்பித்தேன். பிறகு யாத்திரைக்கான அட்டவணை ஒன்று தயாரித்து சில நண்பர்களுக்கு அனுப்பினேன். அவர்களையும் என்னுடன் கூட வரும்படி அழைத்தேன். அவர்களில் K. A. தேவராஜன் (வயது 30) என்பவரும் Dr. R. வேணுகோபால் (வயது 79) என்பவரும் என்னுடன் கூடவர இசைந்தார்கள். பிறகு கான்பூரிலிருக்கும் எனது இரண்டாவது குமாரன் K. S. ரங்கநாதனையும் என்னுடன் வரச் சொல்லிக் கடிதம் எழுதினேன். அவனும் இசைந்தான். இவ்வாறு வெகுவிரிவாக ஏற்பாடுகளைச் செய்து கொண்டு மார்ச் 31ம் தேதி காசிக்குச் சென்றேன். அங்கு சென்னை நண்பர்களான தேவராஜனையும், Dr. வேணு

கோபாலனையும் சந்தித்தேன். பிறகு மூவருமாகச் சேர்ந்து கோரக்பூர் சென்றோம். அங்கு கான்பூரிலிருந்து வந்திருந்த எனது குமாரன் ரங்கநாதனும் எங்களுடன் சேர்ந்து கொண்டான். நாங்கள் நால்வரும் இந்தியாவின் கடைசி ரைல்வே ஸ்டேஷனான **நௌடான்வாவை** அடைந்தோம். பிறகு 5 மைல் தூரம் பஸ்ஸில் பிரயாணம் செய்து இந்திய-நேபாள எல்லையிலுள்ள இந்திய சுங்கச் சாவடியாகிய (செக்போஸ்ட்) **சுனௌலியை** அடைந்து அங்கிருந்து நேபாள செக்போஸ்டாகிய **பைரவாவிற்கு** மாறினோம். அங்கு இந்திய நாணயங்களை நேபாள நாணயங்களாக மாற்றிக்கொண்டோம் (100 ரூபாய் இந்திய நாணயம் = 145 ரூபாய் நேபாள நாணயம்) அன்று இரவு ஒரு ஹோட்டலில் தங்கினோம்.

மறுநாள் அதிகாலை பஸ் மூலம் பைரவாவிலிருந்து **போக்ரா** (190 கி. மீ.)வை அடைந்தோம். 1961ல் தீர்த்தப்பனும் K. R. V.யும் இந்த 190 கி. மீ. தூரத்தை விமானம் மூலம் கடந்திருக்கிறார்கள். ஏனெனில் அப்போது பைராவிலிருந்து போகராவிற்குச் சாலை வசதிகள் கிடையாது. தற்போது சித்தார்த்த ராஜமார்க் என்ற அருமையான நெடுஞ்சாலை ஏற்பட்டிருக்கிறது. எனவே தற்போது விமான வசதிகள் கிடையாது. அதற்குப் பதிலாக பஸ் வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. பஸ் மூலம் நாங்கள் போகராவை பிற்பகல் 2 மணிக்கு அடைந்தோம்.

இப்போது இங்கிருந்து நாங்கள் 68 கி. மீ. தூரத்திலுள்ள ஜம்சம் என்ற ஊருக்குச் செல்ல வேண்டும், 1961ல் தீர்த்தப்பனும் K. R. V.யும் சென்றபோது போக்குவரத்து வசதிகளே கிடையாது. எனவே அவர்கள் இருவரும் இந்த 68 கி. மீ. தூரத்தை நடந்தே சென்றார்கள். ஆனால் தற்போது இவ்விடங்களுக்குச் செல்வதற்கு விமான வசதி ஏற்பட்டிருக்கிறது.

அந்த விமானத்திற்கு முதலிலேயே ரிசர்வ் செய்து கொள்ள வேண்டும். நானும் மார்ச் மாதம் 21ம் தேதியே கல்கத்தாவி லிருந்து 2 டெலக்ஸ் 1 ட்ரங்கால் 2 கடிதங்கள் மூலம் நேபாளத் தின் தலைநகரான காட்மண்டுவுக்கு எழுதிப் பதிவு செய் திருந்தேன். ஆனால் தற்போது (2-4-79) போகராவில் நாங்கள் விசாரித்த போது விமானமே கிடைக்கவில்லை. மறுபடியும் காட்மண்டுவிற்கு டிரங்கால் செய்தும் பயனில்லை.

அப்போது அங்கு ஸ்ரீ ராமநவமி மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வந்தது. ஸ்ரீ ராமநவமி மேளாவினால் ஒரு மாதத்திற்கு ஆகாய விமானம் கிடைக்காது என்று சொல்லி விட்டார்கள். அதே ஸ்ரீ ராமநவமியன்றுதான் சாளக்கிராமத்து எம்பெருமானை தரிசித்து விடவேண்டும் என்று பார்த்திருந்தோம். ஆனால் இப்போது ஒரு மாதத்திற்கு விமானம் கிடைக்காது என்கிறார்களே. ஒருமாதம் இங்கே தங்க முடியுமா ? எங்கு தங்குவது ? எங்கு சாப்பிடுவது என்றே புரியவில்லை. அல்லது நிர்த்தப்பனைப் போல் நாமும் 68 கி. மீ. தூரத்தை நடந்தே கடந்து ஜம்சத்தை அடைய வேண்டியது தானோ ? 79 வயதுக்காரரான Dr. வேணுகோபாலனுக்கும் 66 வயதுக்காரனான எனக்கும் பனிப்பாறைகளினூடே அவ்வளவு தூரம் நடப்பது முடியாத காரியமாயிற்றே ! என்ன செய்வதென்றே புரியவில்லை. திருமோகூர் எம்பெருமானுக்கு வழித்துணையாம் காளமேகம் என்று திருநாமம். அவனையே நினைத்துக் கொண்டு வழிகாட்ட வேண்டினோம். அன்றை இரவு நாங்கள் செய்யக் கூடியது இதைத் தவிர வேறொன்று மில்லை.

(தொடரும்)

# ஆசிரியர் பக்கம்

**ஆலவாயன் :** என்ன ஆசிரியரே! சென்ற இரண்டு முறையாக உம்மைச் சந்திக்கவே முடியவில்லையே! என்ன காரணம்? வாசகர்களோ "எங்கே ஆசிரியர் பக்கத்தைக் காணுமே" என்று மடிபிடித்துக் கேட்கிறார்களே. அவர்களுக்கு என்ன பதில் சொல்வது.

**ஆசிரியர் :** ஆலவாயா! அநந்தாழ்வான் அருளிச் செய்துள்ள ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணத்தைப் பற்றி நீ கேள்விப் பட்டிருக்கிறாயா? அதைப் போலத்தான் நமது ஆசிரியர் பக்கமும்.

**ஆலவாயன் :** அது என்ன சுவாமீ? எனக்குத் தெரியாதே.

**ஆசிரியர் :** ஒருமுறை ஒரு ஸ்ரீவைஷ்ணவர் ஒரு உண்மையான ஸ்ரீவைஷ்ணவன் எப்படியிருக்க வேண்டும் என்று தெரிந்து கொள்ள விரும்பி அநந்தாழ்வானை அணுகினாராம். அநந்தாழ்வானும் அவரை அன்புடன் வரவேற்று மடைப்பள்ளிக்கு அழைத்துச் சென்று விருந்துபசாரம் செய்தாராம். மறுநாள் அவரை கூடத்தில் உட்கார வைத்து உண்ணச் செய்தாராம். அதற்கும் மறுநாள் அவரை புழக்கடையில் உட்காரவைத்து உண்ணச் செய்தாராம். இந்த ஏற்றத்தாழ்வுகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல் இருந்தாராம் அந்த ஸ்ரீவைஷ்ணவர்.

**ஆலவாயன் :** அது சரி ஆசிரியரே! ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணத்தைப் பற்றிக் கூறுகிறேன் என்று கூறிவிட்டு எதையெதையோ கூறுகிறீரே. அந்த ஸ்ரீவைஷ்ணவர் அநந்தாழ்வானிடம் உண்ண வந்தாரா அல்லது உண்மை ஸ்ரீவைஷ்ணவன் நிலையைத் தெரிந்து கொள்ள வந்தாரா?

**ஆசிரியர் :** அதைத்தான் அந்த ஸ்ரீவைஷ்ணவரும் அநந்தாழ்வானிடம் கேட்டாராம். அதற்கு அவர் **"கொக்கைப் போலிருக்கும் கோழியைப் போலிருக்கும் உப்பைப் போலிருக்கும் உம்மைப் போலிருக்கும்"** என்று பதிலிறுத்தாராம்.

**ஆலவாயன் :** இது என்ன ஏதோ மந்திரம் போலிருக்கிறதே தவிர புரியவில்லையே.

**ஆசிரியர் :** உண்மை வைணவன் கொக்கைப் போலிருப்பான். அதாவது "ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு" என்றபடி சிறிய விஷயங்களிலும் அர்த்தங்களிலும் மனத்தைச் செலுத்தாமல் பெரிய விஷயங்களிலே மனத்தைச் செலுத்துவான். கோழி குப்பையிலிருக்கும் மாணிக்கத்தையும் தேடி எடுக்கும். அதுபோல ஸ்ரீவைஷ்ணவனும் தீயவற்றில் கலந்துள்ள நல்லவற்றையும் தேடியெடுப்பவனாக இருப்பான். உப்பைப் போலிருப்பான் அதாவது உப்பு உணவில் அதிகமாயிருந்தால் "உப்பு அதிகமாயிருக்கிறதே" என்று குறை கூறுவர். உப்பு குறைவாக இருந்தாலும் அவ்வாறே குறை கூறுவர். ஆனால் உப்பு சரியாக அளவாக இருந்தால் "உப்பு அளவாக இருக்கிறது" என்று கூறுவார் எவரும் இலர். அதுபோல ஸ்ரீவைஷ்ணவனும் ஒரு திரளில் கலந்து பழகும்போது அளவாகக் கலந்து பரிமாற வேண்டும். மேலும் கடுகு, மிளகு போன்ற மற்றவைகள் உணவிற்குச்சுவையூட்டினாலும் அவை உணவில் தங்கள் உருவத்துடன் இருந்து கொண்டே சுவையூட்டுகின்றன ஆனால் உப்பு நன்றாகக் கரைந்து தன்னை அழித்துக் கொண்டே உணவிற்குச் சுவையூட்டுகிறது.

**ஆலவாயன் !** புரிகிறது ஆசிரியரே, புரிகிறது. அந்த உப்பைப் போலவே ஆசிரியர் பக்கமும் மற்றவர்களுக்கு வாய்ப்பளிப்பதற்தாக தன்னை விலக்கிக் கொண்டும் அதே சமயம் தமது கருத்துக்களை பத்திரிகையின் பல இடங்களில் தெரிவித்துக் கொண்டும் பத்திரிகைக்கு சுவையூட்ட வேண்டும் என்கிறீர். 'உம்மைப் போலிருக்கும்' என்றது எதைக் குறித்து ?

**ஆசிரியர் :** அந்த ஸ்ரீவைஷ்ணவர் மடைப்பள்ளியில் உண்டபோதும் புழக்கடையில் உண்ட போதும் மனம் கோணாமல் இரண்டையும் ஒன்றாகவே கருதினார். ஒரு ஸ்ரீவைஷ்ணவன் முதலில் வைக்கப்பட்டாலும் இடையில் வைக்கப்பட்டாலும் கடைசியில் வைக்கப்பட்டாலும் ஒரே மனத்துடன் இருக்க வேண்டும். எனவே அநந்தாழ்வான் அந்த ஸ்ரீவைஷ்ணவரை நோக்கி "உம்மைப் போலிருக்கும்" என்று கூறினார்.

**ஆலவாயன் :** ஆகா ! ஆசிரியர் பக்கத்தின் தன்மையையும் ஸ்ரீவைஷ்ணவலக்ஷணத்தையும் ஒரே வாக்கியத்தில் கூறி ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்து விட்டீரே !

# செய்திகள்......

"ஆழ்வார் திருநகரி ஸ்ரீ ராமாநுஜ சதுர்வேதி மங்கலத்தில் ஸ்ரீகூரத்தாழ்வான் ஸந்நிதி ஸம்ப்ரோக்ஷணம்".

"மொழியைக் கடக்கும் பெரும்புகழான், வஞ்சமுக்குறும்பாம் குழியைக் கடத்தும் நம் கூரத்தாழ்வான்" என்று திருவரங்கத்தமுதனாரால் போற்றருஞ் சீலமுடைய கூரத்தாழ்வான் பல திவ்ய தேசங்களில் கோயில் கொண்டெழுந்தருளியிருந்தாலும், ஆழ்வார் திருநகரி ராமாநுஜ சதுர்வேதி மங்கலத்தில் திருவாய்மொழிப் பிள்ளையால் பிரதிஷ்டை செய்யப் பெற்று மணவாள மாமுனிகளால் ஆராதிக்கப் பெற்ற கூரத்தாழ்வான் பெருமை நெஞ்சால் நினைப்பரிது. இக்கோயில் 600 ஆண்டுகளுக்கு முற்பட்டது. காலப் பழமையினால் ஜீரணமான கோபுரம், விமாநம் முதலியவைகளைச் செப்பனிட ஸ்ரீ. உ. வே. இளையவில்லி பூவராஹாசாரியர் ஸ்வாமியைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டி இவ்வூர் வாஸிகளால் நிறுவப்பட்டு, மேற்படி ஸ்வாமியின் அயரா உழைப்பாலும், உபந்யாஸங்கள் மூலமும் வேண்டிய திரவிய ஸஹாயம் கிட்டி, திருப்பணி ஒருவாறு நடந்தேறி, நிகழும் மங்களகரமான ஸித்தார்த்தி வருடத்தில் வைகாசி மீ 13 ஆம் தேதி (27-5-79) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5-30 மணிக்கு ஸம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது. அநேக திவ்ய தேசங்களிலிருந்து 74 ஸ்வாமிகள் எழுந்தருளி திவ்யப்ரபந்த ஸேவை, வேதபாராயணம், ஸ்ரீபாஷ்யபகவத்விஷய புராணேதிஹாஸ படனங்களுடன் தினமும் இரண்டு வேளையும் ஹோமம், பூர்ணாஹுதி இவைகள் நடைபெற்றன.

ஸம்ப்ரோக்ஷணம் ஆனவன்று கூரத்தரழ்வான், நம்மாழ்வார் கோயில் சத்ர சாமர மங்கல வாத்ய மரியாதைகளுடன் பெருங்குழாம் புடைசூழ, வேதபாராயணத்துடன் புறப்பட்டு,

நம்மாழ்வார் ஸந்நிதிக்கு எழுந்தருளி நம்மாழ்வாருடன் திருவாராதனம் கண்டருளி மாலை பரிவட்டம், ஸ்ரீராமாநுசன் முதலிய மரியாதைகள் பெற்று, சாற்று முறையாகி, அங்கிருந்து உடையவர் கோயிலுக்கு எழுந்தருளி மங்களா சாஸநம் செய்து, முதலியாண்டான், மாலை, பரியட்டம் முதலிய மரியாதைகள் பெற்று, சந்நிதிக்கு மீண்டெழுந்தருளி சாற்று முறையாகி, கோஷ்டிக்கு, பட்டர், தீர்த்த விநியோக மாயிற்று.

ஸ்ரீ. உ. வே, T. A. திருவேங்கடாசாரியர் ஸ்வாமி, திருமலை அனந்தாண் பிள்ளைக்கே உரிய புஷ்ப கைங்கர்யத்தைத் திருவுள்ளத்தில் கொண்டு, "வரைச் சந்தனக்குழம்பும், வான் கலனும் பட்டும், விரைப்பொலிந்த வெண்மல்லிகையும் நிரைத்துக் கொண்டு" எழுந்தருளி ஆழ்வானுக்கு உபஹரித்து, கோஷ்டியாருக்குப் பல்லாண்டு பாடினமை நெஞ்சை உருக்கிற்று.

இரவு "இராமாநுச நூற்றந்தாதி" கோஷ்டி, வேதபாராயணம் முதலியவைகளுடனும், வாணவேடிக்கை, வாத்ய விசேஷத்துடனும் ஆழ்வான் திருவீதி உத்ஸவம் கண்டருளினர்.

ஐந்து நாட்களிலும் பல வித்வான்களின் காலக்ஷேபங்கள் விமரிசையாக நடைபெற்றன.

ஆழ்வான் கோயில் தர்மகர்த்தா ஸ்ரீ. உ. வே. ராகவன் ஸ்வாமி ஜீர்ணோத்தாரணக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ. உ. வே. இளையவில்லி பூவராஹாசாரியர் ஸ்வாமிக்குப் பொன்னாடை போர்த்தி, பாராட்டுப் பத்திரம் வாசித்தளித்து தலையல்லால் கைமாறிலேனே என்று க்ருதஜ்ஞதாநுஸந்தானத்தைச் செய்தார்.

R. P. ராமய்யங்கார்,
காரியதரிசி,
ஆழ்வான் ஸன்னிதி திருப்பணிக் கமிட்டி.

# ராஸ லீலே

## ஸ்ரீதேவி அம்மாள்

கண்ணபிரான் செய்த லீலைகளில் **ராஸலீலை** என்பதும் ஒன்று. இதை ராஸக்கிரீடை என்றும் குரவைக் கூத்து என்றும் சொல்லுவர். இரு கோபியர்க்கு இடையிடையே கண்ணன் நின்று கை கோத்துக்கொண்டு வட்டமாய்ச் சுற்றிச் சுற்றி ஆடி வந்த ஓர் ஆட்டமாகும். இந்த ராஸலீலையானது கண்ணனின் எட்டாம் வயதில் (புரட்டாசி-ஐப்பசி-பூர்ணிமை தினத்தன்று) நடந்திருக்க வேண்டுமென்று தெளிவாக ஏற் படுகிறது. இவ்விஷயத்தை ஸ்ரீ பாகவதத்தில் பத்தாம் ஸ்கந்தம் 29ஆம் அத்தியாயம் முதல்-ஐந்து அத்தியாயங் களால் உபதேசித்தருளினார், ஸ்ரீ சுகாசாரிய ஸ்வாமிகள்.

ராஸக்கிரீடையில் கலந்து கொண்டவர்கள் நூற்றுப் பத்துக்கோடி கோபிகைகள் ஆவார்கள். இவர்கள் ஸ்ரீ ராமா வதாரத்தில் சக்ரவர்த்தி திருமகன் திருவழகைக் கண்டு மோஹித்த அயோத்தியா, மிதிலை, குகவனம், கிஷ்கிந்தை முதலிய இடங்களிலிருந்தவர்களும், தண்டகாரண்ய முனிவர் களும், யஜ்ஞத்திற்காக ராகவனால் அமைக்கப்பட்ட ஸ்வர்ண ஸீதையும் ப்ரம்ஹாவின் உத்தரவுப்படி கோகுலத்தில் பிறந்த வர்கள் ஆவார்கள்.

பகவானைப் பர்த்தாவாகப் பெற விரும்பி அநேக ஜன்மங் களில் எதிர்பார்த்துக் கடைசியாய் ஸ்ரீ கோபால ஸேவை கிடைத்ததால் கோபிகைகளும், தம் பக்தர்கள் தம்மை அடைந்தார்கள் என்று பகவானும் தங்கள் தங்கள் மனோரதம் நிறைவேறினதாலுண்டான மகிழ்ச்சி காரணமாகச் செய்த நர்த்தன விசேஷமே ராசலீலை எனப்படும்.

கோபிகைகளுக்குத் தலைமை வகித்தவர்கள் நித்ய ஸித்தி கோபிகைகள் 33 பேர்கள் ஆவார்கள். சுசீலா, சந்திரமுகி, மாதவி, கதம்பமாலா, குந்தி, யமுனா, ஜாஹ்நவி, பத்மமுக்யா, ஸாவித்ரி, பாரிஜாதா, ஸ்வயம்பிரபா, சுதாமுகி, சுபா, பத்மா, கௌரி, ஸர்வ மங்களா, காளிகா, கமலா, துர்க்கா, ஸரஸ்வதி, பாரதி, அபர்ணா, ரதி, கங்கா, அம்பிகா, சதி, நந்தினி, ஸுந்தரி, கிருஷ்ணப்பிரியா, மதுமதி, சம்பா, சந்தனா, சோபனா என்ற திருநாமங்களுடையவர்கள். மற்றவர்கள் இவர்களின் தோழிகள். இவர்களனைவர்க்கும் தலைவி இராதை.

பகவதவதாரத்தையொட்டி அவதரித்த கோபிகைகள் பந்தஹேதுவான பதி புத்ராதிகளிடத்தில் பற்றில்லாதவர்களாய், கண்ணபிரானைக் காணும் சமயத்தை எதிர்பார்த்து வசித்து வரும்பொழுது ஸ்ரீ கோபாலனது வேணுகான சப்தமாகிற உபநிடதார்த்தம் அவர்கள் செவியில் விழவே அனைத்தையும் துறந்து பகவானையடைந்தார்கள்.

இந்த 'ராஸ லீலை' சிருங்கார காவ்யம் என்று சிலர் அபிப்ராயப் படலாம். ஆனால் ஸர்வ ஸங்க பரித்தியாகம் செய்தவரும், கோபாலனையே பரமாத்மாவாக எண்ணி அவனது லீலையை உபதேசிக்கத் தொடங்கினவருமான ஸ்ரீசுகாசாரியர் இதை உபதேசித்ததிலிருந்தும், பாகவதத்துக்குப் பாஷ்யஞ் செய்த ஸ்ரீதராசார்ய ஸ்வாமிகளும், இந்த ராஸ பஞ்சாத்யாயிக்கு அவதாரிகை செய்யுமிடத்துத் தெளிவாகச் சொல்லியிருப்பதைக் கொண்டும், இந்த ராஸ லீலை சிருங்கார காவ்யம் அன்று என்பதை வியக்தமாகத் தெரிந்து கொள்ளலாம்.

உலகத்தில் ஸ்த்ரீ புருஷர்களின் லீலையைப் போல பகவானுடைய இந்த லீலையை நினைக்கக் கூடாதென்று ஸ்ரீசுகாசாரியரே தெளிவாய் உபதேசித்திருக்கிறார். ஸம்ஸாரக் கடலைத் தாண்ட எண்ணமுள்ளவர்களுக்கும், பலவித துக்கமாகிற காட்டுத்தீயால் பீடிக்கப்பட்ட ஜீவனுக்கும், ஸ்ரீகோபாலனது

லீலா ரஸத்தைச் சேவித்தலைத் தவிர்த்து, வேறு சாதனமில்லை யென்று ஸ்ரீசுகாசாரியார் சொல்லியிருப்பதாலும் ஸ்ரீபோதேந்திர ஸ்வாமிகள், நாராயண தீர்த்தர் முதலான மஹான்கள் பகவதுத்ஸவ காலங்களில் இந்தக் கோபிகா கீதத்தை கானஞ் செய்யும்படி நியமனஞ் செய்திருக்கிற படியாலும் குற்றமற்ற இந்த **'ராஸ லீலா'** பெருமை பன்மடங்கு அதிகரித்தது என்னலாம்.

பகவான் கோபிகைகளின் மனோரதத்திற்கிணங்க, தமது அப்ராக்ருத சக்தி விசேஷத்தால் ஒரு பிரம ராத்திரியை ஒரு ஸரத்கால ராத்திரியாக வரவழைத்து ராஸ லீலையைச் செய்தருளினார்.

பகவத் கீதையில் **"ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய"** என்ற சரணாகதி தத்துவம் ராஸ லீலையால் வெளியாகிறது. கோபிகைகள் யாவற்றையும் விட்டு, பகவானே சரணம் என்றே அவனை அடைந்தார்கள்.

எப்படி ஒரு சிசு தன் ப்ரதி பிம்பத்தைக் கண்ணாடியில் கண்டு விளையாடுமோ அப்படியே லக்ஷ்மி வல்லபனான கிருஷ்ணன் கோபிகைகளுடன் விளையாடினான்.

கடந்த ஞானிகளாகிற ஸ்ரீசுகர், பீஷ்மர், உத்தவர், கௌரங்கர், முதலான மஹான்கள் இவர்கள் உறவைப் புகழ்ந்தே பேசியிருக்கிறார்கள்.

ஸ்ரீராமாயணத்தில் ஸ்ரீராமஜனனம், சீதையை அனுமான் காணுதல், பட்டாபிஷேகம் இவைகளும், பாரதத்தில் பகவத் கீதையும், ஸ்ரீவிஷ்ணு ஸகஸ்ரநாமமும் சிறப்பான பகுதிகள் என்று சொல்லுவார்கள்.

ஸ்ரீ பாகவதத்திலோ **'ராஸ கிரீடை'** மேல் சொன்னவைகளைக் காட்டிலும் மிகவும் ச்லாக்யமானது. ஏனெனில் ஜீவராசிகள் பகவானுடன் கலந்து வாழ எண்ணி, அநேக ஜன்மங்கள் காத்திருந்து, இப்போது அவனையடைந்து, தங்கள் மனோரதம் பூர்த்தி பெற்றது, — யாவற்றிலும் பெரிதல்லவா!

ஸ்ரீமந் நாராயணன் கோபஸ்த்ரீகளுடன் செய்த இந்த **ராஸ லீலையை** எவன் கேட்கிறானோ, எவன் உபதேசிக்கிறானோ, அவ்விருவரும் மேலான பகவத் பக்தியையடைந்து-மனத்தைத் தன வசமாக்கிக் கொண்டவனாகிறான்—என்றும் ஸ்ரீசுகாசாரியரே சொல்லியிருக்கிறார். அதன்படி இந்த **ராஸ லீலையை** ச்ரவணம் செய்து, ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் அருளை அடைவோமாக.

Grams GHEE Phone: 23092

AIM AT PERFECTION IN EVERYTHING

—*Chesterfiled*

# PERUMAL & CO.,

142, AUDIAPPA NAICKEN STREET,
MADRAS - 600 001.
(Near Kothawal Market)

**Butter, Ghee and Oils, For Purity, Quality and Taste, Fixed Price and Standard Quality**
**We Served you for 45 Years**
**We Solicit your Co-operation to Serve you better in future**

BUY "PADMA COFFEE" FOR FLAVOUR & TASTE

புத்தக விமரிசனம் :

# திருப்பாவை

[வெளியிட்டோர் : திவ்யதேச மங்களாசாஸன கோஷ்டி 25, T. P. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, 600 005. 25+35 பக்கங்கள் ; விலை ரூ. 2-00]

திருப்பாவை என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இந்த நூல் திருப்பாவை மற்றும் கீதாஸங்க்ரஹம் என்ற இரண்டு நூல்கள் அடங்கியதாகும். முதலதில் திருப்பாவைக்கும் திருப்பள்ளியெழுச்சிக்கும் ஸ்ரீ உ. வே. ஸ்தலசயனத் துறைவார் எழுதிய அழகிய எளிய சுருக்கவுரையைக் காண்கிறோம். பாசுரத்தில் வலியுறுத்தப்படும் கருத்துக்களும் தனியாக மிக அழகாகத் தரப்பட்டிருக்கிறது. உதாரணமாக "புலம்பின புட்களும்" பாசுரத்தின் உட்பொருள் "நம்மிடம் கைங்கர்யத்தைப் பெறும்படி பகவானைக் காத்திருக்கச் செய்யாமல் அவனுக்குக் கைங்கர்யம் செய்ய வாய்ப்புக் கிடைக்குமா என்று நாம் காத்திருக்க வேண்டும்" என்று காட்டியுள்ளார். அனைவரும் அவசியம் அறிந்து ஒழுக வேண்டிய அர்த்தங்கள் இம்மாதிரி இன்னும் பல காட்டப்பட்டிருக்கின்றன.

கீதா ஸங்க்ரஹம் என்பது கீர்த்தி மூர்த்தியான காரப்பங்காடு மஹாவித்வான் ஸ்ரீ உ. வே. வேங்கடாசாரியர் ஸ்வாமி கீதையின் ஸாரமாக 108 சுலோகங்களைத் தேர்ந்தெடுத்து உரை அருளியிருக்கிறார். இது பல பதிப்புக்கள் ஏறிய அரிய நூலாகும். ஸ்ரீ ஸ்வாமியின் உரையின் எளிமை, தெளிவு, பெருமை இவைகளை யாவரும் அறிவாராதலால், பேச அவசியமில்லை.

எல்லா ஆஸ்திகர்களும் அவசியம் வாங்கிப் படித்துப் பயனுற வேண்டிய நூல் இது.

# "திருவாய்மொழியும் த்வயமும்"

ஸ்ரீராமானுஜ தர்சநத்தில் பரமாத்ம ஸ்வரூபம் சேதநா சேதந விலக்ஷணமாயும் ஸர்வஜ்ஞமாயும் ஸர்வ சக்தியாயும் அறுதியிடப் பட்டுள்ளது. உலகில் சில விஷயங்களை நாம் காண்கிற கணக்கிலே ப்ரஹ்மஸ்வரூபத்தை யறுதியிடயியலாது. பரமாத்ம விஷயத்தில் நித்ய நிர்துஷ்டமான வேதாந்தமே மூலப்ரமாண மாகும். அதனை யநுஸரித்த ப்ரமாணங்களே உபஷ்டம்பக ப்ரமாணமாகும். ஆகையால் ப்ரஹ்மத்தை வேதாந்தம் சொன்ன கட்டளையிலே யங்கீகரிப்பதே வேதாந்திகள் ஸம்மதமாகும். வேதாந்த விருத்தமான தர்க்கம் குதர்க்கமாகும். வேதாந்தாநுகுண தர்க்கமே ஸத்தர்க்கமாகும் என்பது நம் ஸ்வாமி எம்பெருமானார் திருவுள்ளம். ஸகல வைதிக ஸம்மதம். வேதாந்தங்களிலே பரப்ரஹ்மம் "யஸ்ஸர்வஜ்ஞ:

வேளுக்குடி K. வரதாசாரியர்

ஸர்வவித்" என்று ஸர்வஜ்ஞமாயும், "பராஸ்ய சக்தி:விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீஜ்ஞாந பல க்ரியாச" என்று ஸர்வ சக்தியாயும் கூறப்பட்டுள்ளது. இதனைக் கொண்டே நம ஸ்வாமி பலபல அர்த்தங்களை ஸம்ப்ரதாய ஸாரார்த்தங்களாக வறுதியிட்டுள்ளார் உலகில் உபாதாந நிமித்த காரணங்களுக்கு பேதமே காணப்படுகிறது மண்ணைக் கொண்டு குயவன் குடத்தைச் செய்கிறான். அவ்விடத்தில் குடம் என்கிற காரியப் பொருளுக்கு மண் உபாதாந காரணமாகும். அதுவே குடமாகப் பரிணமிக்கிறதாகையாலிறே. குயவன் நிமித்த காரணபூதன். அவனே ஸங்கல்பித்துச் செய்கிறானன்றோ. ஸங்கல்ப மில்லாத அசித்தான மண் நிமித்த காரணமாக மாட்டாது. விகரிக்காத குயவன் உபாதாந காரணமாக மாட்டான்.

ஆக ஒவ்வோர் கார்யத்திற்கும் உபாதாந காரணம் வேறு நிமித்த காரணம் வேறு என்பதை உலகில் காண்கிறோம். ஆயினும் ஜகத்தாகிற காரியப்பொருளுக்கு பரப்ரஹ்மம் அகில காரணமும் தானே யாயிருக்கிறது. த்ரிவித காரணமாயும் உளது. நிமித்த காரணமாயும் உபாதாந காரணமாயும் மற்றும் ஸஹகாரி காரணமாயும் உள்ளது என்றபடி. இவ் விஷயத்தை வேதவ்யாஸர் ப்ரக்ருத்யதிகரணத்தில் சாரீரகத்தில் நிரூபித்துள்ளார். அவ்வதிகரணத்தில் 'ஸாக்ஷாத்ச உபயாம் நாநாத்" (1-4-25) என்ற ஸூத்ரமும், அந்த ஸூத்ரத்தின் பாஷ்யத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் காட்டியருளிய "ப்ரஹ்மவநம் ப்ரஹ்ம ஸவ்ருக்ஷ ஆஸீத்" என்ற வேதாந்த வாக்யமும் உற்று நோக்கத்தக்க ப்ரமாணங்களாகும். ஆக ஜகத்துக்கு ப்ரஹ்மம் அபிந்ந நிமித்தோபாதாநம் என்பது ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தம். இது லோகவிலக்ஷணமாய் வேதாந்த வேத்யமுமாகும். ப்ரஹ்மம் வேதாந்தவேத்யமன்றோ. வேதாந்தம் சொன்ன கட்டளையன்றோ வைதிகஸம்மதம். ப்ரஹ்மம் ஸர்வஜ்ஞமாயுள்ளதாகையால் நிமித்தகாரணமாகவும் ஸர்வசக்தியாகையால் உபாதாந காரணமாகவும் உள்ளது. "ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வ நிமித்தத்வ உபாதாநத்வ உபயோகிநீ" என்று ஸ்ரீச்ருதப்ரகாசிகா வாக்யம்.

ஸங்கல்ப விசிஷ்டப்ரஹ்மம் நிமித்தமென்றும் சேதநாசேத விசிஷ்டப்ரஹ்மம உபாதாநம் என்றும் அறுதியிடப் பட்டுள்ளது. ஸங்கல்பம் நிமித்ததாவச்சேதகம் என்றும் சேதநாசேதந வைசிஷ்ட்யம் உபாதாநதாவச்சேதகம் என்றும் சாஸ்த்ர முறைப்படி கூறுவர் நம் பெரியோர். இதே போல மற்றொரு விஷயமும் உள்ளது. கேண்மின்.

உலகில் ப்ராப்யப்ராபகங்களுக்கு பேதத்தைக் காண்கிறோம். ஓடியாடிப் பணம் ஸம்பாதிக்கிறான். இது ப்ராபகம்; உபாயம். பெண்டு பிள்ளைகளோடு ஸுகிக்கிறான். இது

ப்ராப்யம்; உபேயம். பேறு. வேதத்திலும் காண்கிறோம். யாகம் செய்கிறான். இது உபாயம் ஆறு. இதனால் ஸ்வர்கம் பெறுகிறான் இது உபாயம், பேறு. ஆறு (உபாயம்) பேறாக (உபேயம்) மாட்டாது. ப்ராப்யம் ப்ராபகமாக மாட்டாது. ப்ராப்ய ப்ராபகங்களுக்கு பேதமே உள்ளது. ஆயினும் ப்ரஹ்மம் தானே ஜீவாத்மாக்களுக்கு ப்ராப்யமாயும் ப்ராபகமாகவும் உள்ளது. ப்ராப்ய ப்ராபகைக்யம் ஸம்ப்ரதாய ஸித்தம். நிமித்தோபாதாநைக்யம் போலே இது ப்ரமாண ஸம்ப்ரதாய ஸித்தம். "நெறிவாசல் தானேயாய் நின்றான்" என்று பொய்கையாழ்வார் அருளிச் செய்துள்ளார். இங்கே உபாதாநதாவச்சேதகமும் நிமித்ததாவச்சேதகமும் பிந்நம் என்று கூறப்பட்டது.

அதேபோல் இங்கும் ப்ராப்யதாவச்சேதகம் வேறு — ப்ராபகதாவச்சேதகம் வேறு என்று நிஷ்கர்ஷித்துள்ளனர். கருணாவிசிஷ்டனான பகவான் உபாயபூதனென்றும் போக்யதாவிசிஷ்டன் உபேய பூதன் என்றும் கூறுவர் நம் பெரியோர். இது தன்னையே நம்பிள்ளை "இரக்கம் உபாயம் இனிமை உபேயம்" என்றருளிச் செய்துள்ளார். இவ்விஷயங்களை "நல்குரவும் செல்வும்" திருவாய்மொழி வ்யாக்யாந ஈட்டு அவதாரிகையில் நம்பிள்ளை "இனி நிமித்தமானது உபாதாநமாக மாட்டாது. உபாதாநமானது நிமித்தமாக மாட்டாது இங்ஙனேயிருக்க — இவையெல்லாம் தானாயிருக்கிறபடியையும் — இனி நாட்டில் ப்ராப்யமானது ப்ராபகமாட்டாது. ப்ராபகமானது ப்ராப்யமாக மாட்டாது இங்ஙனேயிருக்க — ப்ராப்ய ப்ராபகங்கள் இரண்டும் தானேயாயிருக்கிறபடியையும்" என்று அருளிச் செய்துள்ளார். ப்ராப்யமான ப்ரஹ்மம் ஸித்த வஸ்துவாகையாலும் ப்ராபகமான ப்ரஹ்மம் ஸித்தவஸ்துவாகையாலும் ப்ரஹ்மம் ஸித்த ப்ராப்யமாகவும் ஸித்த ப்ராபகமாயும் உள்ளது என்று அறியலாம். அவன் ஸித்த ப்ராப்யனாலும் தேசவிசேஷ (பரமபத) விசிஷ்டத்வவேஷேண ப்ராப்

யமாகிறான். ஸித்தோபாயமானாலும் அவனை உபாயமாகப் பற்றவேணும். இது ஸாத்யமாகும். உபாயம் ஸித்தமானாலும் உபாய ஸ்வீகாரம் ஸாத்யமாகும். "ஸ்வப்ரயத்ந ஸாத்யமா பகவத் ப்ரயத்ந ஸாத்யமா" என்ற விசாரம் தனிப் பட்டதாகும்

பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்றி பகவானுடைய சரணங்களை யுபாயமாகப் பற்றவேணும் ஜீவன் என்று சாஸ்த்ர நிஷ்கர்ஷம். "உபாயம் ஸ்வீகார காலத்தில் புருஷஸாபேக்ஷமுமாய் புருஷகார ஸாபேக்ஷமுமாய் இருக்கும். கார்ய காலத்தில் உபய நிரபேக்ஷமாயிருக்கும்" என்று பிள்ளை உலகாரியன் ஸ்ரீவசநபூஷணத்தில் அருளிச் செய்துள்ளார். "கார்ய காலத்தில் ஸஹகார்யாபேக்ஷத்வமுண்டாகிலிறே உபாயத்தினுடைய நைரபேக்ஷ்யத்துக்கு ஹாநிவரும் என்று கருத்து" என்று பெரிய ஜீயரும் அருளிச் செய்துள்ளார்.

மூலமந்திரத்தில் மத்யமபதமான நமப்பதத்தால் உபாயம் சொல்லப்பட்டாலும் புருஷகாரஸமாச்ரயணம் கூறப்பட்டது த்வயத்தில் பூர்வவாக்யத்தில் ஸ்ரீமத் பதத்தாலேயிறே. அதே போல பரமாத்மா ஸித்தோபாயபூதன் ஆயினும் அவனை உபாயமாக இவன் பற்றவேணுமே இதுதான் 'ப்ரபத்யே" என்று த்வய பூர்வ வாக்யத்தில் ஐந்தாவது பதத்தாலே கூறப் பட்டது. இதுவே சேதநகதமாயிருந்துள்ள ப்ரார்த்தநாகர்ப விஸ்ரம்பம் என்று கூறப்படுகிறது. இதுவே திருவாய்மொழி ஐந்தாம்பத்தில் கூறப்பட்டுள்ளது.

இது தன்னை மேலே விவரிக்கிறேன் ஸாரஸங்க்ரஹத்தின் படி.

(தொடரும்)

# எவ்வுள் கிடந்தான்

**ஏழைக்கு இரங்காய் இனி! :**—எம்பெருமானே நீ கருணைக் கடல்! உயிர்களின் மீது அன்பும் இரக்கமும் கொண்டவன். உன் பெருமை யறியாமல் சிலர் உன்னிடம் அபசாரப் படுகிறார்கள். உன்னைப்பற்றி அறிந்திருந்தும் அஹங்காரத்தினால் உன்னோடு மோதுகிறார்கள். அவர்கள் செய்யும் குற்றங்களை எல்லாம் பொறுத்துக் கொண்டு அவர்களையும் காப்பாற்றுகிறாய். உன் பெருமையறியாமல் காகாசுரன் பிராட்டியிடம் அபசாரப்பட்டான்; உன் கோபத்திற்கு இலக்கானான். ஆனால் அவனையும் உயிரோடு விட்டு ரக்ஷித்தாய்; 'கருணா காகுத்ஸ்தன்' என்று பெயர் பெற்றாயே! அரக்கர் குலமே உன்னிடமும், ஸீதா பிராட்டியிடமும் அபசாரப்பட்டாலும், உன்னைச் சரணடைந்த விபீஷணாழ்வானுக்காக, அக்குலத்தையும் ரக்ஷித்தாய்.

## ஸ்தலசயனத்துறைவார்

உன் பெருமையைப் பற்றிப் பேசும் போதெல்லாம் அவர்களின் பெயரும் உடன் வருகிறதே! அப்படிப்பட்ட சிறப்பையும் கொடுத்தாயே! அடியேனும் நற்பண்பு இல்லாதவன். கொடிய எண்ணத்தை (சிந்தனையை) உடையவன்! மனத்தாலும், சொல்லாலும், உடலாலும் பல குற்றங்களைச் செய்துள்ளேன். குன்றனைய குற்றம் செயினும் நீ குணமாகக் கொள்ளுமிறைவனல்லனோ! ஆதலால், அடியேனிடத்தும் இரக்கம் காட்ட வேணும்; தேவரீருக்கு அடிமை செய்ய அடியேனையும் ஆட்கொள்ள வேண்டும் என்று பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் எவ்வுள் கிடந்த வீரராகவனிடம் இறைஞ்சுகிறார். என் போன்ற ஏழைக்கு இரங்காய் இனி!

**நீர்மை கெடவ்வதாரு நின்னோடெதிர்த்தாருஞ்**
**சீர்மைபெற நின்னடிக்கீழ்ச் சேர்க்கையினால் - நேர்மையிலா**
**வெவ்வுளத்தனேன் செய்பிழையைப் பொறுத்தருளி**
**வெவ்வுளத்தனே நீ யிரங்கு**

நூற்-திருப்-அந்தாதி (90)

**வீரராகவன் பாண்டவநாதன்!** :—சேராச் சேர்த்தியாகி இருக்கிறதே! வியக்காதீர்! 'அன்று காலையிலிருந்து இதுவரை செய்த செயல்களுள், ஏதேனும் ஓர் நல்ல செயலைச் செய்திருக்கிறோமா?' என்று நல்லவர்கள் நாள் தோறும் மாலையில் தனிமையில் அமர்ந்து சிந்திப்பார்கள். பகவான் இராமனாக அவதரித்தான். விசுவாமித்திரரின் வேள்வியை முடித்து வைத்தான். ஜனகர் கொண்டுவரச் செய்த வில்லினை வளைத்து (ஒடித்து) ஸீதையை மனைவியாக ஏற்றான். தந்தை சொற்படி வனம் சென்றான். கரதூஷணாதியரை ஒருவனாகவே நின்று வதம் செய்தான். வாலியைக் கொன்று சுக்ரீவனுக்கு அரசாட்சியை மீட்டுக் கொடுத்தான். அனுமனைத் தூதனுப்பி ஸீதை இருக்குமிடத்தை அறிந்தான்! இராவணனை வென்றான். விபீஷணனுக்கு அரசுரிமை அளித்தான். மாவீரனான இராமன் எத்தனை செயல்களைச் செய்திருக்கிறான்! அப்பப்பா! எல்லாம் அரிய செயல்கள்! இருந்தாலும் அவதார முடிவில் தனியாக உட்கார்ந்து 'இந்த அவதார காலத்தில் நடந்த செயல்களுள் சிறந்தது எது?' என்று சிந்தித்தான். தான் செய்த செயல்களெல்லாம் (அவனுக்குச்) சிறந்தவையாகத் தோன்றவில்லை; செயற்கரிய செயல்களாகத் தோன்றவில்லை. அனுமன் தூது சென்றதையே பெரிதாக நினைத்தான்! ஸீதையை விட்டுப் பிரிந்து வாழ முடியாத என்னையும், என்னை விட்டுப் பிரிந்து வாழ்வதைவிட உயிரை மாய்த்துக் கொள்வதே மேல் என்று நினைத்த ஸீதா பிராட்டியையும் காப்பாற்றினாரே! இருவரையும் வாழவைத்தாரே! எத்துணை உதவி! ஈடற்ற உதவி! என்று நினைத்தான். மற்றொரு அவதாரத்தை

மேற்கொண்டால் தூது செல்லும் பணியை எவருக்கும் தரக் கூடாது. நாமே இப்பணியைச் செய்ய வேண்டும் என்று நீர் மானித்தான். அந்த ராமனே கண்ணனாகப் பிறந்து பாண்டவர்களுக்குத் தூது சென்று பாண்டவதூதன் என்ற பெயர் பெற்றான். அவனே திருவள்ளூரில் சயனித்துக் கொண்டிருக்கிறான் என்கிறார் திருமங்கையாழ்வார்.

முன்னோர் தூது வானரத்தின் வாயில்மொழிந்து அரக்கன்
மன்னூர் தன்னை வாளியினால் மாளமுனிந்து, அவனே
பின்னோர் தூது ஆதிமன்னர்க்காகிப் பெருநிலத்தார்
இன்னார் தூதனென நின்றான் எவ்வுள் கிடந்தானே.

பெரிய திருமொழி 2. 2. 3.

**எவ்வுள் கிடந்தான் :** திருவள்ளூர் என்ற பெயரை இப்போது எல்லோரும் தெளிவாகச் சொல்லுகிறார்கள். முன்பு இவ்வூரைத் திருவெவ்வுளூர் என்றே கூறி வந்தார்கள். தமிழ்ச் சொற்களைப் பிழையறக் கூறுவோரே இச்சொல்லை நன்கு கூற முடியும்! பகவான் சாலிஹோத்ர முனிவரின் எதிரில் தோன்றினான் 'நான் அமைதியாகப் படுப்பதற்கு ஏற்ற இடம் எது? (எவ்வுள்?) என்று கேட்டான். சாலிஹோத்ரமுனிவர் தன்னுடைய ஆசிரமத்தைக் காட்டினார். பகவான் அவ்விடத்தைக் கண்டவுடன் மகிழ்ந்தான்! 'ஆ! சிரமம்' நீங்கியது என்று அவ்விடத்திலேயே படுத்தான். இப்போதும் படுத்துக் கொண்டே இருக்கிறான்! எல்லாம் நமக்காக! பகவான் தானே விரும்பி 'எவ்வுள்?' என்று கேட்டபடியால் அவ்விடத்துக்கு ஊரே எவ்வுளூர் ஆயிற்று. திரு என்ற அடைமொழியும் பெற்றுத் திருவெவ்வுளூர் என்று கூறப்பட்டது. காலப்போக்கில் இச்சொல் மருவித் திருவள்ளூராயிற்று. திருவள்ளூரைப்

பற்றி அறியாதவர்களே இல்லை இவ்வூர் சென்னையிலிருந்து 25 கல் தொலைவில் உள்ளது. இதுவரை செல்லாதவர் எவரே னும் இருந்தால் ஒரு முறையேனும் சென்று வாருங்கள்! வீர ராகவனை வணங்கினால் நற்பயன் பெறலாம். அவனுக்காகப் பெரும்பொருள் எதையும் எடுத்துச் செல்லவேண்டாம். பக்தியை மட்டும் விட்டுவிடாதீர்கள். செடிகளில் நல்ல மலர் இருந்தால் கொய்து (பறித்து)ச் செல்லுங்கள். ஸ்ரீ வீரராக வனின் திருவடிகளில் இடுங்கள். நீங்கள் பணி செய்யும் அலுவலகத்தில், (உங்கள் பணியில்) நீங்களும் அதிகாரிகளாக ஆவீர். (ஆட்சி செலுத்தும் சக்தியைப் பெறுவீர்!) 'அண்ட மாள்வது ஆணை! அன்றேல், ஆள்வார் அமருலகே' என்பது திருமங்கையாழ்வாரின் அருள்வாக்கு.



# ஆனந்தவிகடனின் சிந்தனைக்கு !

ஆனந்த விகடனில் பல காலங்களாகவே ஸ்ரீ பரணீதரன் என்பவர் பல புனித யாத்திரைகளையும் தற்சமயம் கேரள யாத்திரையும் எழுதிவருவதை அன்பர்கள் யாவரும் அறிவர்.

விகடன் 17-6-79 இதழில் நமது பரணீதரன் ''திருமூழிக்களம்'' எனும் ஊர் பற்றி எழுதியுள்ளார். அந்த ஊரினை வர்ணிக்க ஆரம்பிக்கும் போதே அவர் எழுதுகின்றார் :

> ''ஒன்பதாவது நூற்றாண்டில், இரண்டாவது சேர வம்சத்தின் தலைசிறந்த மன்னர்களில் முக்கியமானவர் குலசேகரப் பெருமாள். அவர் காலத்தில் வைணவ மதம் உன்னத நிலையிலிருந்த போது கேரளத்தில் பதின்மூன்று திருப்பதிகளில் கோயில்கள் நிறுவப் பெற்றன. அவற்றில் திருமூழிக்குளம் ஸ்ரீலட்சுமணர் கோயிலும் ஒன்றாகும்''.
>
> என்று:

இதன் மூலம் பரணீதரனின் தெரிவிப்பது கேரளத்தில் குலசேகரப் பெருமான் சேர அரசராக இருர்த காலத்தில் தான், தமது முயற்சியினால் கேரளத்தில் 13 திருப்பதிகளில் விஷ்ணு கோயில்கள் தோற்றுவித்தார் என்பதேயாகும்.

108 திவ்ய தேசங்களில் 13 திவ்ய தேசங்கள் மலைநாட்டுத் திருப்பதிகளாக குலாவப் படுகின்றன. இந்த 13ல் 11 திவ்ய தேசங்கள் தற்கால கேரள எல்லைக்குள் உள்ளன. இந்த 13 திவ்ய தேசங்களில் 12 திவ்ய தேசங்கள் நம்மாழ்வரால் மங்களாசாஸனம் செய்யப் பெற்றவையாகும். இந்த 12ல் திருமூழிக்களம் திவ்ய தேசம் நம்மாழ்வாராலும் திருமங்கையாழ்வாராலும் மங்களாஸனம் செய்யப்பட்ட திவ்ய தேசமாகும். நம்மாழ்வார் குலசேகராழ்வாரின் காலத்திற்கு முற்பட்டவர் என்பதனை பாமரரும் அறிவர். மேலும் நம்மாழ்வார் காலத்திற்கு முற்பட்ட புராணத் திருத்தலங்களையே ஆழ்வார் தமது காலத்தில் மங்களாசாஸனம் செய்துள்ளார். ஆக நம்மாழ்வரால் மங்களாசாஸனம் பெறப் பெற்ற திவ்ய தேசங்களை நம்மாழ்வார் காலத்திற்கு பிற்பட்ட குலசேகராழ்வார் நிறுவியதாக நமது பரணீதரன் எழுதியிருப்பது தவறு. இதை அவர் உணர்வாரா? —மதுரகவி

# அன்புள்ள கீதாசார்யரே!

**R. வேங்கடராமாநுஜன்**

சென்னை-30

தன்குரு என்றதன் கருத்து அது மாமுனி என்றது சாலும், எனினும்மிவ்வுரையுள்ளுவார் அவர் ஏற்றுள்ளார் என்னுதல் வேண்டுமே. மேற்சொலும் பாக்களுக்கேற்பவே, அதை மெய்ப்பிடச் செய்வது வேண்டுமே.

**மோஹன திருமலை**

காயல்பட்டணம்

திருவாய்மொழிச் சாரத்தை குறள் வடிவில் கொடுத்த திருவாளர் ஸௌம்யவின் திறமையைப் போற்றிடுவோம்.

**வரதராஜன்**

மதுரை

கண்ணனும் பார்த்தனும் திருத்தலங்களைப் பற்றி விவரிக்க 'தீர்த்த யாத்திரை' புறப்பட்டது கண்டு மகிழ்ச்சியடைகிறோம். இவ்விவரங்கள் தொடர்ந்து சுவையாக வெளிவரும் என்று ஆவலோடு காத்திருக்கிறோம்.

**ராமசுப்ரமணியன்**

திருநின்றவூர்

என்ன! எங்கள் ஊருக்கு இவ்வளவு பெருமைகளா. இத்தனை நாள் இவற்றை நான் அறியாமலே இருந்து விட்டேனே. இன்று நான் ஊரில் நுழையும் போது ஒரு புதிய மனிதன் போல், என் ஊரின் பெருமைகளை நினைத்துக் கொண்டே நுழைந்தேன். அதற்காக கீதாசார்யனுக்கு அல்ல அல்ல—கண்ணனுக்கு (இருவரும் ஒருவரேயன்றோ) மிக்க நன்றி.

**பாபு**

சென்னை

விண்ணுளாரிலும் சீரியர் படைக்காக எங்கள் உயிரையும் தரத்தயாராயிருக்கிறோம். கீதாசார்யனே தலைமையேற்று—புண்ணிய பாரதப்போரில் வழிகாட்டியதுபோல வழி காட்டட்டும்.

# ஆஸ்திகரே!

உங்கள் அன்பாலும் ஆதரவாலும் தோசார்யன் வீறு நடை போட்டு வருகிறான். நீங்கள் வளர்க்கும் தோசார்யனுக்கு ஓராண்டு நிறைய இன்னும் மூன்றே மாதங்களே இருக்கின்றன. முதலாண்டு விழாவை மிகப்பெரும் விழாவாகக் கொண்டாடவேண்டும் என்று எண்ணியிருக்கிறோம். அதற்கு இப்போதிலிருந்தே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கிறது.

மேலும் இவ்விழாவில் வாசகர்களும் பங்குகொள்ளும்படி அமையவேண்டும் என்று விரும்புகிறோம். அதாவது விழாவில் ஒரு வாசகர் மேடையும் இருக்க வேண்டும் என்பது எங்களது ஆவல். விழாவை எவ்வகையில் மேலும் சிறப்பாகக் கொண்டாடலாம் என்று உங்கள் ஆலோசனைகளை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். உங்கள் சிறந்த ஆலோசனைக்கு பாராட்டும் பரிசும் வழங்கப்படும்.

தவிர ஆண்டுவிழா மலர் ஒன்றும் சிறப்பான முறையில் வெளியிடலாம் என்றிருக்கிறோம். அம்மலர் எவ்வகையில் அமையவேண்டும் என்றும் உங்கள் ஆலோசனைகளைக் கூறுங்கள். மிகவும் உயர்ந்த வகையில் அம்மலரைத் தயாரித்து குறைந்த விலையில் உங்களுக்குத் தரவேண்டுமென்றிருக்கிறோம் வழக்கம்போல் விளம்பரங்கள் பெற்றுத்தான் இந்தக் காரியத்தை சாதிக்க முடியும். அதற்கும் உங்கள் உதவி நிறைய தேவை. விவரங்களை அடுத்த இதழில் தெரிவிக்கின்றோம்.

அடுத்த இதழில் சந்திப்போமா!

Edited and Published by M. A. Venkata Krishnan and Prin.ed at Guru Achagam, 19, Irusappa Gramani Street, Triplicane, Madras-600 005.

# ஸ்ரீபெரும்பூதூரில் கருத்தரங்கம்

1979 ஜூலை 21, 22 தேதிகளில் சென்னைக்கருகில் ஸ்ரீ எம்பெருமானாரின் அவதாரஸ்தலமாகிய ஸ்ரீபெரும்பூதூரில் எம்பெருமானாருடைய வேதாந்தக் கொள்கைகளைப் பற்றியும், அவருடைய சமுதாய நோக்கங்களைப் பற்றியும் ஒரு கருத்தரங்கம் (Seminar) ஸ்ரீராமானுஜ வேதாந்த சென்டர், ஸ்ரீ பெரும்பூதூர் ஸம்ஸ்கிருத பாடசாலை, இவ்விரண்டு ஸ்தாபனங்களின் சார்பிலும் நடைபெறும். 21—7—79 காலை தமிழ்நாடு ஆளுனர் மேன்மை தங்கிய ஸ்ரீ பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் இந்தக் கருத்தரங்கத்தைத் துவக்கி வைப்பார். பாரதத்தின் பல்வேறு பல்கலைக்கழகங்களிலிருந்தும் வித்வான்களும், ஸம்பிரதாயத்தில் தேர்ந்த உபயவேதாந்த வித்வான்களும் இந்தக் கருத்தரங்கில் பங்குபெறுவார்கள். இந்த ஏற்பாடுகளை மேற்கொண்டு நிறைவேற்றி வைக்க முன்னாள் நீதிபதி ஸ்ரீ என். கிருஷ்ணஸ்வாமி ரெட்டியாரின் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. கருத்தரங்கம் பற்றிய தகவல்களை "காரியதரிசி, ஸ்ரீ ராமானுஜ வேதாந்த சென்டர், 10 தெற்கு மாடவீதி திருவல்லிக்கேணி சென்னை-5" அவர்களிடமிருந்து பெறலாம்.